விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 24 திங்கட்கிழமை (10.10.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 295

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து

# அமைதி முயற்சிகளில் வெற்றிபெற மகிந்தவால் ஒருபோதும் முடியாது

## ரணிலே பொருத்தமானவர் என்கிறார் ஆறுமுகம் தொண்டமான்

(கொழும்பு)

இனவாதக்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள மகிந்தராஜ பக்ஷ சமாதான முயற்சிகளில் வெற்றிபெற முடியாது.

ரணில் விக்கிரமசிங்கவைப் போன்றவர்களால் மட்டுமே சமாதான முயற்சிகளில் வெற்றியடைய முடியும். அவரின் முயற்சியாலேயே நாம் இன்று அமைதியை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றிற்கு அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ஷ எங்களது நிபந்தனைகளை ஏற்றாலும் ஜே.வி.பியுடன் அவர் இணைந்திருப்பது ஆச்சரியமளிக்கிறது. ஆயிரக்கணக்கான மலையகத் தமிழ் இளைஞர்களை படுகொலை செய்தது ஜே.வி.பி. என்றும், மலையகத்தமிழர்களை அச்சுறுத்தி வருகிறது ஜே.வி.பி.

அது ஒரு இனவாதக்கட்சி ஜே.வி.பியுடன் இணைந்திருக்கும் மகிந்தராஜபக்ஷவால் அமைதி முயற்சிகளில் வெற்றிபெற முடியாது எனக் கருதுகின்றோம். ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய (12 ஆம் பக்கம் பார்க்க)



## பாகிஸ்தானை உலுக்கிய பூகம்பத்தில் பலியானோரின் எண்ணிக்கை 35,000

### 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயம்

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மிகப் பயங்கரமான பூகம்பத்தில் இடிபாடுகளில் சிக்கி 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 80ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளை இழந்து வீதியோரங்களில் வசித்து வருகின்றனர்.

இடிபாடுகளில் சிக்கி மேலும் உயிரிழப்புக்கள் அதிகரிக்கக்கூடுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை வடஇந்தியா, காஸ்மீரில் இறந்தவர்களின் எண்ணிக்கை 700ஐத்தாண்டியுள்ளது. (விரிவான செய்திகள் உள்ளே) (ச-4)

## மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான ஜே.வி.பியின் பிரசாரம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பியினர் ஆதரவு தெரிவித்ததன் பின்னர் நடத்தும் முதலாவது பரப்புரைக் கூட்டம் இன்று கம்பஹாவில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்வார்கள் என ஜே.வி.பியினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக தேசிய ரீதியில் 18 மாவட்டங்களில் ஜே.வி.பியினர் பரப்புரைக் கூட்டங்களை நடத்தவுள்ளதாகவும் அவ் அனைத்துக் கூட்டங்களிலும் சோமவன்ச அமரசிங்க கலந்துகொள்ளவுள்ளார்.

இன்று ஹம்பகாவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான நந்தன குணதிலக ,விமல்வீரவன்ச, சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் ரில்வின்சில்வா ஆகியோர் கலந்து கொள்வர்.

இதுபோன்று ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் சிறுசிறு கூட்டங்களாக 10 ஆயிரம் கூட்டங்களை ஜே.வி.பியினர் நடத்தவுள்ளனர். (ச-4)

## டொன்புறாவ் ஹெவ்டே இன்று இலங்கை வருகை

(கொழும்பு)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புறூவ் ஹெவ்டே 8நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார்.

இவ் விஜயத்தின் போது எதிர்வரும் 13ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன் அரசாங்கத்துடனும் அவர் விரிவான பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளார்.வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்பு நிலை ,யுத்தநிறுத்த உடன்படிக்கையினைத் தொடர்ந்து கடைப்பிடித்தல் என்பன தொடர்பாக இப்பேச்சுவார்த்தைகளின் போது முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் சி.சு.க எம்.பி ஐ.தே.கவில் இணைவு

(கொழும்பு)

பதுளை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லொக்கு பண்டார ஜயசுந்தர ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டார்.

நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து கட்சி உறுப்பினராகும் ஆவணத்தைப் பெற்றுக்கொண்டதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரபல ஆதரவாளர்கள் 15பேர் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கண்டி (12 ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூலமான வாக்களிப்பு விண்ணப்ப முடிவுத்திகதி இன்று

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித்தினம் இன்றாகும்.

அத்தோடு இடம் பெயர்ந்த வாக்காளர்கள் மற்றும் வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்தினமும் இன்று என தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இக்கால அவகாசம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது என்று உதவித் தேர்தல் ஆணையாளர் ரொசிக்க பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலினை முன்னிட்டு தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு கடந்த செப்ரெம்பர் 8ஆம் திகதி தொடக்கம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

EXPOAIR

*your friend in the skies...*

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள் ஊர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன்றைய சிறுவர்கள்; நாளைய தலைவர்கள்

## ஏழ்மையால் வாடிய சிறுவன் முயற்சியால் ஜனாதிபதி ஆனான்

அமெரிக்காவில் 1862 ஆம் ஆண்டு வரை நீக்ரோ மக்களை அடிமைகளாகச் சந்தைகளில் விற்றுவந்தார்கள். தங்களை வாங்கியவர்களுக்கு அடிமைகள் ஆயுள்முழுவதும் வேலைசெய்ய வேண்டும். மனிதர்களை ஆடு மாடுகளைப் போல நடத்தும் இக் கொடிய அடிமைமுறையை ஒழித்து, நீக்ரோ மக்களுக்கு விடுதலை அளித்தவர், உலகப் புகழ்பெற்றவர், அமெரிக்காவின் 16 ஆவது குடியரசுத் தலைவரான ஆபிரகாம் லிங்கன்.


ஆபிரகாம் லிங்கன்

கென்டக்கின் (KENTUCKY) மாநிலத்தில் 1809 பெப்ரவரி 12 ஆம் நாள் லிங்கன் பிறந்தார். இவருடைய தந்தை மிகவும் ஏழை. அதனால் லிங்கன் பள்ளிக்குச் செல்லவில்லை. தாமே எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார். நண்பர்களிடம் நூல்களை கட னாக வாங்கிப் படித்து அறிவைப் பெருகிக் கொண்டார். தம் 21 ஆம் வயதுவரை சிறுசிறு வேலைகள் செய்து குடும்ப வருமானத்திற்கு உதவி வந்தார்.

லிங்கன் 1831 நியூசேலம் என்ற நகரில் ஒரு மளிகைக் கடையில் வேலையேற்றார். தம்முடைய அறிவாற்றலாலும், நகைச்சுவை யாலும் அந்த நகர மக்களிடம் செல்வாக்குப் பெற்றார்.

1834 இல் இல்லினாஸ் மாநில சட்ட சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கிடையில் சட்ட நூல்களை கற்று 1835 இல் வழக்குரைஞரானார். வழக்குரைஞர் தொழிலில் இவர் பெரும் புகழ்பெற்றார். 1842இல் மேரி டாட் (MARY TODD) என்பவரை மணந்தார்.

அமெரிக்க நாடாளுமன்ற (CONGRESS) உறுப்பினராக 1847 இல் லிங்கன் தேர்ந் தெடுக்கப்பட்டார். 1856இல் அடிமைமுறையை எதிர்ப்பதற்காக குடியரசுக் கட்சி (REPUBLICAN PARTY) தோன்றியது. லிங்கன் அக்கட்சியில் சேர்ந்து அதன் முன்னணித் தலைவர்களுள் ஒருவரானார்.

அமெரிக்காவின் தென்மாநிலங்களில் தோட்டங்களும், வேளாண்மைப் பண்ணைகளும் மிகுதி. அவற்றில் வேலைசெய்வதற்கு அவற்றின் முதலாளிகள்; நீக்ரோ அடிமைகளைப் பெருமளவில் பயன்படுத்தி வந்தனர்.

அவர்கள் அடிமைமுறையை ஆதரித்தார்கள். ஆனால் வடமாநில மக்கள் அடிமைமுறையை எதிர்த்தார்கள்.

இந்நிலையில் 1860 இல் நடந்த குடியர சுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக லிங்கன் போட்டியிட்டு வென் றார். அடிமைமுறையை ஒழிக்கும் எண்ணம்கொண்ட லிங்கன் குடியரசுத் தலைவரானதைத் தென் மாநிலங்கள் விரும்பவில்லை.

அவை தாங்கள் தனிநாடாகப் பிரிந்து போவதாக அறிவித்தன. தென்மாநிலங்களுக்கும் வட மாநிலங்களுக்கும் இடையே 1861இல் உள்நாட்டுப் போர் மூண்டது.

இப் போரை லிங்கன் உறுதியோடும் திறமையோடும் நடத்தினார். 1863 ஜனவரியில் அமெரிக்காவிலுள்ள அடிமைகள் அனைவரையும் விடுதலை செய்வதாகப் பிரகடனம் செய்தார். 1865இல் தென் மாநிலங்கள் தோற்றன. உள்நாட்டுப்போர் முடிந்தது.

அமெரிக்காவின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதில் லிங்கன் வெற்றிபெற்றார்.

1865 இல் நடந்த தேர்தலில் லிங்கன் மீண்டும் குடியரசுத் தலைவராகத் தேர்வுபெற்றார். 1865 ஏப்ரல் 14 இல் இவர் ஒரு நாடக அரங்கில் நாடகம் பார்த்துக்கொண்டிருந்தபோது இவருடைய கொள்கையை அடியோடு வெறுத்த ஜான் வில்க்ஸ் பூத் என்ற நடிகன் இவரை துப்பாக்கியால் சுட்டுவிட்டான். மறுநாள் காலையில் லிங்கன் காலமானார். உலகமே இவரது மறைவுக்காகக் கண்ணீர்வடித்தது. XXX

## எதிர்காலத்தை உருவாக்கும் சிறுவர்களை இலட்சிய நோக்குடையவர்களாக்குவோம்



இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்பது பொய்யாமொழி. நாளை இந்த நாட்டையோ உலகையோ ஆழப்போகிறவர்கள் யார்? எம் கண்முன் புத்தகம்தூக்கி பள்ளி செல்லும் சிறுவர்களே. இவர்களின் சின்னஞ்சிறிய கரங்கள் நாளைய நாட்டின் சகல சுமைகளையும் தாங்கும் வலிமை பெற்ற கரங்களாக வளரப்போகின்றன. நாமோ எமக்கு மூத்தோரோ இன்னும் பலகாலத்துக்கு இருந்து இந்த உலகை ஆண்டுகொண்டு இருக்கப்போவதில்லை. நிச்சயமாக அந்தப்பணியைச் செய்யப்போவது இன்றைய சிறுவர்களே.

### முதியவர் கடமை

சர்வதேச சிறுவர் தினத்திலே சிறுவர்களின் உரிமைகள், தேவைகள் என்பவற்றை வளர்ந்தவர்களாகிய நாமும் சிந்தித்து அவற்றை அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அவர்களை நாட்டுப்பற்று, மொழிப்பற்று, மதப்பற்று, மனிதாபிமானம் உள்ளவர்களாக வளர்த்தெடுக்க ஆவன செய்ய வேண்டும். அகம்பாவம், சுயநலம், எனபவற்றால் அவாகளுக்கு ஏற்படக்கூடிய தீங்குகளில் இருந்து அவர்களைக் காப்பாற்றவேண்டியது வளர்ந்த அனைவரினதும கடமையாகும்.

"கொடிதுகொடிது வறுமை கொடிது அதனிலும் கொடிது இளமையில் வறுமை" என்று ஔவையார் பாடியுள்ளார். இன்று பாருங்கள் எத்தனை சிறுவர்கள் வறுமையில் வாடுகிறார்கள். உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு ஆகிய அடிப்படை வசதிகளைக்கூட எட்டிப் பிடிக்கமுடியாமல் எத்தனையோ சிறுவர்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் இருந்துதான் நாளைய சமுதாயம் உதிக்கப்போகின்றது.

மற்றத் தேவைகளான அன்பு, அரவணைப்பு, தோழமை என்பன தாய், தந்தை பாதுகாவலர் சார்ந்தவையாகும். கல்வித் தேவையைப் பொறுத்தவரை எத்தகைய சூழ்நிலையிலும் சிறுவர்களுக்கு கல்வி அறிவு கொடுப்பதை அவர்கள் புறக் கணிக்கமாட்டார்கள். செல்வச்செழிப்பில் மிதப்போரும் கல்வி அறிவுடையோரும் தமது வளத்தில் ஒருபகுதியை ஏழை மக்களின் கல்விக்காக ஒதுக்குவார்களாயின் எதிர்காலம் அவர்களை வாழ்த்தும்.

### உதவுதல் அவசியம்

அடுத்ததாக போர்ச்சூழலால், சுனாமியால் தமது தாய் தந்தையரை இழந்து அநாதைகளாகியுள்ள சிறுவர்களைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டும். இவர்கள் அநாதை இல்லங்களிலும் உறவினர்களின் பராமரிப்பிலும் சொல்லொணாத் துயர்களை அனுபவிக்கின்றார்கள். இவர்களுக்கு உதவ அனைத்து நல்ல உள்ளங்களும் முன்வரவேண்டும்.

பொருளாதார வசதியுடையோர் இவர்கள் இருக்கும் இடங்களைத் தேடிச்சென்று தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யலாம். அவ்வாறு செய்ய முடியாதோர் இவர்களை அனுகி இவர்களின் உள்ளம் மகிழும்படி உரையாடி சிறுவர் பாடல்களைச் சொல்லிக் கொடுத்து, அவர்களுடன் விளையாடி அவர்களின் உளத்தேவைகளைக் கண்டறிந்து உதவமுடியும்.

இவ்வாறான சிந்தனைகளைச் செயற்படுத்தவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சர்வதேச சிறுவர் நாளாக அக்டோபர் முதலாம் திகதியினை பிரகடனம் செய்துள்ளது.

ஒவ்வொரு சிறுவர்களையும் நாம் மகிழவிக்கும்போது அது அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்து, நாம் முதியோராகும்போது எம்மைக் கௌரவிக்க வைக்கும். இதனை ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் மனதில் நிறுத்திக்கொள்ளவேண்டியது அவசியம்.

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

## அள்ள அள்ளக் குறையாத செல்வம் கல்வி



மருங்காபுரி மன்னன் திரிலோக் வீரமும், விவேகமும் ஒருங்கே அமையப்பெற்றவன். அவனுக்கு ஆண் மக்கள் மூவர். அவர்களுள் அறிவும் புத்திக் கூர்மையும் உள்ள ஒருவனைத் தனக்குப் பின் அரசாளத் தேர்ந்தெடுக்க நினைத்தான். அரச குருவின் ஆலோசனை கேட்கப்பட்டது. அவர்களின் விவேகத்தை அறிய போட்டி ஒன்று வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் மூவரும் ஒரு நன்நாளில் அழைக்கப் பட்டனர்.

குமாரர்களே... எனக்கோ வயதாகி விட்டது. உங்கள் மூவருக்கும் ஒருபோட்டி வைக்க விரும்புகிறேன். அப்போட்டியில் ஜெயிப்பவர்களுக்கே அரச மகுடம்! என்றான்.

தந்தையே... திரிலோக் என்ற பெயரின் அர்த்தம் மூவுலகம். அப் பெயருக்கு ஏற்ப மூவுலகையும் ஆளும் சக்திபெற்ற நீங்கள் வயதாகி விட்டது என்று சொல்லலாமா? தாங்கள் நீண்ட ஆயுசுடன் வாழ்ந்து ஆட்சி செய்யவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். இருப்பினும் போட்டி என்று வந்தபிறகு அதில் பங்குபெற நாங்கள் தயார் என்றனர் புதல்வர்கள்.

போட்டியென்ன தந்தையே? மூத்தவன் கேட்டான்.

நான் உங்கள் மூவருக்கும் தனித்தனியே 10 ஆயிரம் பொற்காசுகள் தருவேன். ஒருவருடம் கழித்து அக்காசுகளை பலவாகத் திருப்பித்தரவேண்டும்.

ப்பூ! இவ்வளவுதானே பணத்தைப் பெருக்கவா முடியாது என்றான் இரண்டாம் மகன்.

இப்போட்டியை எங்கள் விவேகத்திற்கு சவால்விடும் போட்டியாகவே கருதுகிறேன்! என்றான் இளையவன்.

மருங்காபுரி மன்னன் அவை கூடியது. இராஜகுரு அக்கினி மித்திரர் தலைமையில் அவர்களுக்கு ஆளுக்கு 10 ஆயிரம் பொற்காசுகள் கொடுக்கப்பட்டன.

அடுத்த ஆண்டு இதேநாளில் நீங்கள் இங்கு வரவேண்டும். அப்போது வெற்றிபெற்ற உங்களில் ஒருவர் அரசனாக்கப்படுவார். வெற்றிபெறப்போகும் உங்களில் ஒருவருக்கு எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள் என்றார் அரசகுரு.

ஓராண்டு கடந்தது....

அந்தக் குறிப்பிட்ட நாளில் அரச குமாரர்கள் மூவரும் அரசசபைக்கு வந்திருந்தனர். அவர்கள் ஒன்றைப் பலவாக எப்படி ஆக்கியிருக்கின்றனர் என்பதை அறிய மந்திரிகளும் மதியூகிகளும்கூட மன்னன் அவைக்கு வந்திருந்தனர்.

மூத்த இளவரசனை அழைத்து நீ ஒன்றை பலவாக ஆக்கிய வித்தையைக் கூறு என்றார் ராஜகுரு.

என்தந்தை கொடுத்த 10 ஆயிரம் பொற்காசுகளை ஒரு வணிகனிடம் கொடுத்தேன். அவர் அதை ஒருவருடத்திற்குள் எனக்கு இரட்டிப்பாக்கிக் கொடுத்துவிட்டார். இருந்த இடத்தில் இருந்துகொண்டு சிறிதுகூட சிரமப்படாமல் பணத்தை எப்படி இரட்டிப்பாக்கியிருக்கிறேன் பார்த்தீர்களா? இதோ பணமுடிப்பு சரியாக இருக்கிறதா என்று எண்ணிப் பாருங்கள் என் றான் மூத்த இளவரசன்.

சிரித்துக்கொண்டே அதை வாங்கிக் கொண்டார் இராஜகுரு.

இரண்டாவது இளவரசன் அழைக்கப்பட்டான்.

குரு அவர்களே அந்தப் பத்தாயிரம் பொற்காசுகளுக்கு 10 வேலி நிலத்தை வாங்கி ஆட்களை வைத்து உழுது பயிர்செய்து மண்ணைப் பொன்னாக்கி 50 ஆயிரம் பொற்காசுகளைக் கொண்டுவந்திருக்கிறேன். எனது தம்பி இதற்கு மேல் பணம் கொண்டுவந்திருக்க மாட்டான் என்று நினைக்கிறேன். நான் ஒன்றை ஐந்து மடங்காக்கி இருக்கிறேன். எனவே அரச பதவி எனக்குத்தான் என்று பணமுடிப்பைக் கொடுத் தான்.

இளையவன் எழுந்து பேச ஆரம்பித்தான்.

வணக்கத்துக்குரிய குரு இவர்களைப் போல் நான் பணம் கொண்டுவரவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள்.

தந்தையே கேட்டீர்களா? தம்பி ஒன்றும் கொண்டுவரவில்லையாம். மணிமகுடம் எனக்குத்தான் என்பது உறுதியாகிவிட்டது என் றான் இரண்டாமவன்.

அவசரப்படாதே மகனே. உன் தம்பி சொல்வதை முழுவதுமாகக் கேட்போம்.

நான் பாடசாலை ஒன்றை அமைத்து அதில் பல ஆசிரியர்களை நியமித்து ஏராளமான ஏழைக் குழைந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுக்கும்படி செய்திருக்கிறேன். விஜயபுரம் வந்து நீங்கள் நேரில் பார்த்துக்கொள்ளலாம்.

காசைக் கரியாக்கிவிட்டான் .. கரியாக்கி விட்டான் என்று முணுமுணுத்தான் மூத்த இளவரசன்.

தந்தையின் கட்டளை என்ன? ஒன்றைப் பலவாக்க வேண்டுமென்பதுதானே. நீ ஊதாரித்தனமாக செலவழித்துவிட்டாயே என்றான் இரண்டாம் இளவரசன்.

உங்கள் பணம் இன்றிருக்கும் நாளை போய்விடும். அள்ள அள்ளக் குறையாத செல்வம் கல்வி மட்டும்தான். கொடுக்க கொடுக்க பிற செல்வங்கள் குறையும். ஆனால் கல்விச் செல்வமோ வளரும் என்றான் மூன்றாவது இளவரசன்.

ஒரு அரசனுக்கு ஆழ்ந்த மெய்ப்பொருள் உணர்வுதேவை. எதையும் நுணுக்கமாக ஆராயும் திறன் வேண்டும். ஒன்று பலவாகிப் பரிணமிப்பது கல்வியே. இதை சூட்சுமமாகப் புரிந்துகொண்ட இவரது ஞானமும்; அறிவும் பாராட்டுக்குரியது. மூன்றாவது இளவரசனுக்கே மணிமகுடம் என்று சொல்லிமுடித்தார் இராஜ குரு. ஆரவாரம் விண்ணைப்பிளந்தது. XXX

# மஹிந்தவுக்கு ஜே.வி.பி. ஆதரவில் அதிருப்தி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்துள் பிளவு?

## கட்சி தாவும் தீர்மானமாம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவை ஜே.வி.பி.ஆதரிப்பதையடுத்து ஜே.விபியின்துணை அமைப்பான தேசப்பற்றுள்ள தேசிய இயக்கதிற்குள் பிளவு தோன்றியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அவ் இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்சதேரர் ஏற்கனவே கட்சியில் இருந்து விலகியுள்ள நிலையில் மேலும் பலர் கட்சியை விட்டு விலகுவதற்கு முடிபு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, கட்சியிலிருந்து விலகி யுள்ள எல்லே குணவன்சதேரர் ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு முடிபு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது. அண்மையில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் மீண்டும் இணைந்து கொண்ட சிறிசேன கூரேயின் உதவியுடன் ரணில் விக்கிரமசிங்கவைச்சந்தித்து மீண்டும் தனது ஆதரவை அவருக்குத் தெரிவிப்பதற்கு குணவன்சதேரர் முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-4)

# வேட்பாளர்கள் விரும்பினால் மட்டுமே சர்வதேச கண்காணிப்பாளர் கடமைகளில்!

## தேர்தல் ஆணையாளர் தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் விரும்பினால் மட்டுமே சர்வதேச கண்காணிப்பாளர்களை தேர்தல் கடமையில் ஈடுபடுத்துவது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க முடிவு செய்துள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் கண்காணிப்புக்கு வேட்பாளர்களின் விருப்பத்தை பெற்றுக்கொள்வது சட்டப்படி அவசியமானது என்பதால் இது தொடர்பாக வேட்பாளர்களின் விருப்பத்தை அறிவதற்காக இவ்வாரம் விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

வேட்பாளர்களின் விருப்பம் கிடைக்குமானால் சுமார் 75 வெளிநாட்டு காண்காணிப்பாளர்கள் நாடளாவிய ரீதியில் தேர்தல் கண்காணிப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

இது தவிர உள்நாட்டுத்தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் ஆயிரக்கணக்கான கண்காணிப்பாளர்களும் தேர்தல் கண்காணிப்புக்கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர். (ற-4)

# தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் பொலிஸாரை மிரட்டும் அரசியல்வாதிகள்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலில் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தேர்தல் சட்ட விதிகளை மீறி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளையும் கட்டவுட்களையும் அகற்றிய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக அரசியல் ரீதியிலான பல்வேறு அழுத்தங்கள் விடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அச்சுறுத்தலை சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சில அரசியல் வாதிகள் பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரிகளை மிகமோசமாக திட்டியதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

எந்தத்தடை வந்தாலும் சுவரொட்டிகளையும் கட்அவுட்களையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த அந்த அதிகாரி எதிர்வரும் நாட்களில் இவ்விதம் அச்சுறுத்தல் விடுப்பவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார். (ற)

# விடுதலைப்புலிகள் தொடர்பில் ஆராய ஐரோ. ஒன்றிய நாடுகள் சபை அடுத்த இரு வாரங்களில் கூடும்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புத் தொடர்பில் மேற்கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சபை அடுத்த இரு வாரத்தினுள் கூடவுள்ளதாகத் தெரியவருகிறது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையினை அமுல்படுத்த விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் தவறுவதாக 23 ஐரோப்பிய நாடுகளுக்கு அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இத்தகவல்கள் குறித்து விசேட கவனம் செலுத்தியும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையை கருத்தில் கொண்டுமே ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளுக்கு தமது நாடுகளுக்கு வருவதற்கான பயணத்தடையை விதித்தது.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என ஐரோ்பிய ஒன்றியம் வலியுறுத்தி வருகிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டப்படும் அமைப்புக்கள் மீது ஐரோப்பிய ஒன்றியம் படிப்படியாக தடைகளை கொண்டுவரும்.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறுகின்றனரா எனக் கண்காணித்து இதனை விடக்கடும் நடவடிக்கையினை ஐரோப்பிய ஒன்றியத்தின் சபை எடுக்க இடமுள்ளதாக ராஜதந்திர வட்டராங்கள் தெரிவித்ததாக கொழும்பு ஊடகம்ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# பொலிஸாரை விடுவிக்குமாறு க.கா.குழு மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)


தமிழீழ நீதிமன்ற விளக்கமறியலில் உள்ள 3 பொலிஸாரையும் விடுதலை செய்யுமாறு யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனான நோர்வே தூதுவரின் சந்திப்பின் போது இந்த விடயம் ஆராயப்பட்டதாக தெரிவிககப்படுகின்றது.

இவ்விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிடம் நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் விளக்கியதாகவும் தெரிவிக்கின்றது.

இதனிடையே மூன்று பொலிஸாரையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் இவர்களைக் கைது செய்தது யுத்த நிறுத்த மீறல் என்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓல்ப்ஸ் டொட்டியர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழீழ நிர்வாகப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்ததற்காக விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட மூன்று பொலிஸாரும் தமிழீழ நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனா. நாளை வரை மூன்று பேரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-4)



யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. வரதராஜாவின் 'வல்லிபுர ஆழ்வார் பாமாலை' இறுவெட்டு நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வில் பாமாலை ஆசிரியர், இசைக் கலாவித்தகர் உமா ரமணக்குருக்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- விஸ்ணு, சிவா)

# விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐ.நா. ஊடாக நடவடிக்கை?

## அரசாங்கம் தீவிர முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டுள்ள அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் சீனா ஆகிய நாடுகளிடம் இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவும் பிரித்தானியாவும் அரசாங்கத்தின் கோரிக்கைக்கு சாதகமாக பதிலளித்துள்ளது.

இதனிடையே பிரான்ஸுக்கு பயணம் மேற்கொணட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரான்ஸ் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே இது குறித்து கலந்துரையாடியதாகத் தெரிவந்துள்ளது.

கடந்த மாத நடுப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள சென்றிருந்த முக்கிய வெளிநாட்டுத் தலைவர்களுடன் சந்திரிகா இந்த விடயம் தொடர்பாக கலநதுரையாடியுள்ளதாக தெரியவருகிறது.

ஐக்கிய நாடுகள் சபை மூலமாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த நடவடிக்கையில் எப்படியேனும் வெற்றி பெற்று விடவேண்டும் என அரசாங்க தரப்பு முனைப்புக் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையின் தலைமை அடுத்த ஆண்டு டென்மார்க்கிற்கு வழங்கப்படவுள்ளது. டென்மார்க்கில் செயற்படும் அரசாங்கத்தின் ஆதரவுக்குழு ஒன்றின் மூலம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கும் நடவடிககை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்தெரியவருகிறது. தமிழ்மக்களைப் பலமிழக்கச் செய்து விட்டு தாங்கள் விரும்பிய தீர்வினை தமிழ் மக்கள்மீது திணிப்பதே அரசாங்கத்தின்திட்டமென அரசியல நோக்கர்கள் கருதுகின்றனர். (ற-4)

# பாலத்தில் சறுக்கியது வான்; பயணித்த ஒருவர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

புதிதாக போடப்பட்டுள்ள கைதடிப் பாலத்தில் வாகன சாரதிகள் மழைக்காலங்களில் வாகனங்களைச் செலுத்தும் போது எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் இவ் இரும்புப்பாலத்தில மெதுவாக பிறேக்பிடிக்கும் போதும் வாகனம் சறுக்கி பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் இப்பாலத்தினுள் வாகனங்களைச் செலுத்தும்போது மிக அவதானமாக இருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இப்பாலத்தினுள் ஹயஸ் வான் ஒன்று சறுக்கி பாலத்தின் கேடருடன் மோதியதில் வாகனத்தில் பயணம் செய்யத ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலையை நோக்கி சென்று கொண்டிருக்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த பலாலி வீதி திருநெல்வேலியைச் சேர்ந்த ஐயாத்துரை கிரிதாஸ் (வயது37) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இக் கைதடிப் பாலத்தில் சிறு சிறு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதால் வாகன சாரதிகளை அவதானமாக இருக்கும் படி கேட்கப்பட்டுள்ளது. (ற

# சச்சின் 12

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

ஆனால் அதற்குள் செயின்ட் சேவியர் பள்ளி அணி மனத்தளவில் நொறுங்கிப் போயிருந்தது. சச்சின், காம்ப்ளி இருவரும் தனித்தனியே எடுத்த ஸ்கோர்களில் பாதியைக் கூட அவர்கள் பத்துப்பேரும் சேர்ந்து சேகரிக்க முடியாத நிலைமை,சாரதாஷ்ரம் பள்ளி அபாரமான வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இறுதிப் போட்டியில் சாரதாஷ்ரம் அணி பலமான அன்ஷுமன் ஏ-இஸ்லாம் அணியை எதிர்த்து விளையாடியது. இந்த முறையும் டாஸில் சச்சினுக்கே வெற்றி. பேட்டிங்கே தீர்மானம் .

முந்தைய போட்டியைப் போல் இல்லாமல் இந்த முறை காம்ப்ளி சொற்ப ரன்களிலேயே ஆட்டமிழந்துவிட பொறுப்பு மொத்தமும் சச்சினின் தோள்களில் விழுந்தது. அவன் அதைச் சுமக்க எப்போது திணறியிருக்கிறான்? தொடர்ந்து மூன்று நாட்கள் சளைக்காமல் பேட் செய்த



ஐந்து வயதில் சச்சின்

சச்சின் 346 ரன்கள் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தான்!

ஆனால், அந்தப் போட்டியில்'சச்சினின் அணியால் வெல்ல முடியவில்லை. எதிரணியின் கடைசி இரண்டு விக்கெற்களை சாரதாஷ்ரம் பவுலர்களால் கிள்ளியெறிய முடியாததால் போட்டி எத்தரப்புக்கும் வெற்றி, தோல்வி இன்றி முடிவடைந்தது. ஹாரிஷ் ஷீல்ட் கோப்பையை இரு அணிகளும் பகிர்ந்து கொண்டன.

சுலபமாக ஜெயித்திருக்கவேண்டிய கோப்பையை வேறொரு அணியுடன் பகிர்ந்துகொள்வதில் சச்சினுக்கு ஏமாற்றம் தான். என்றாலும் அவனது அடுத்தடுத்த மூன்று சதங்களை எல்லாப் பத்திரிகைகளும் குறிப்பிட்டு எழுதிப் பாராட்டியிருந்தன. அநேகமாக அத்தனை இதழ்களிலும் விளையாட்டுப் பகுதியை சச்சினின் புகைப்படம் தவறாமல் அலங்கரித்தது. இந்திய கிரிக்கெற்றின் எதிர்கால நட்சத்திரமாக இந்தச் சிறுவனைப் பார்க்கிறேன் என்று சுனில் கவாஸ்கர் வாயாரப் பாராட்டினார்.

ஒரு வழியாக இந்த அமர்க்களமெல்லாம் அடங்கிய பின்னர் கிட்டத்தட்ட ஒரு மாதம் கழித்து அந்தப் பரபரப்பான செய்தி வெளியானது. அரையிறுதிப் போட்டியில் செயின்ட் சேவியர் பள்ளிக்கெதிராக சச்சினும் காம்ப்ளியும் ஜோடி சேர்ந்து குவித்த அந்த இமாலய ரன்கள் ஒரு 'புதிய உலக சாதனை' யானது.

## 4. அந்தப் பதினைந்து பந்துகள்

கின்னஸ் புத்தகத்தில் அந்த சாதனைக் குறிப்பு இன்னமும் இருக்கிறது. இதுவரை விளையாடப்பட்ட அனைத்து கிரிக்கெற் போட்டிகளிலும் எல்லா விக்கெற்டுகளுக்கும் சேர்த்து அதிகபட்சமான பார்ட்னர்ஷிப் பதினைந்து வயது நிரம்பாத சிறுவர்களான சச்சினும் காம்ப்ளியும் இணை சேர்ந்து குவித்த அந்த 664 ரன்கள்தான்!

பதினைந்துக்கும் மேற்பட்ட நாடுகளில் கிரிக்கெற் இடைவிடாமல் தொடர்ந்து விளையாடப்படுகிறது. சிறியவர்கள் பெரியவர்கள் எல்லோரும் ஆடுகிறார்கள். ஆனாலும் அந்த இரு சிறுவர்களின் சாதனை இன்றுவரை முறியடிக்கப்படவில்லை.

மும்பைச் சிறுவர்களின் இணையற்ற இந்தச் சாதனை அடுத்த சில மாதங்களுக்கு இந்தியாவின் அனைத்துப் பத்திரிகைகளிலும் பரபரப்பான செய்தியாகியிருந்தது. கிரிக்கெற்றின் பைபிள் என்று போற்றப்படும் விஸ்டென் கிரிக்கெற் அல்மனாக் இதழும் சச்சின், காம்ப்ளியின் இந்த சாதனையைப் பிரசுரித்து அங்கீகரித்தது. சச்சின், காம்ப்ளி இருவரின் புகைப்படங்களும் பேட்டிகளும் அவர்களது ஆட்டத்தை நேரில் பார்திருந்தவர்களின் அனுபவ விமர்சனங்களுமாக பாராட்டுரைகள் நிரம்பி வழிய அச்ரேகரின் திறமைமிகு மாணவர்கள் இருவரையும் இந்தியா எதிர்பார்ப்போடு கவனிக்க ஆரம்பித்தது.




பள்ளிப் போட்டிகளிலும் காங்கா லீகிலும் சச்சின் தொடர்ந்து சிறப்பாக விளையாடி வந்ததால் CCI எனப்படும் கிரிக்கெற் கிளப் ஆஃப் இந்திய சச்சினைத் தங்கள் அணியில் சேர்த்துக்கொள்ள முன்வந்தது. புகழ் பெற்ற அந்த அணியில் 18 வயதுக்கு உட்பட்ட யாரையும் அனுமதிப்பதில்லை. ஆனாலும் சச்சினின் திறமைக்கு முன்னால் அந்த விதிமுறைகள் எல்லாம் தளர்ந்துவிட்டன. எதிர் பாராமல் சச்சினுக்குக் கிடைத்த இந்த கௌரவத்துக்கு முக்கிய காரணமாயிருந்தவர் CCI யின் அப் போதைய தலைவராகவும் இந்திய அணியின் தேர்வுக் குழுவின் தலைவராகவும் இருந்த ராஜ்சிங் துங்கர்புர்தான். CCI போன்ற பெரிய அணி ஒன்றில் சச்சின் இடம்பெறக் காரண மாக இருந்த இவரே சில ஆண்டுகளுக்குப் பின் அவன் இந்தி அணியில் நுழையவும் உத வினார்.

அதுவரை பள்ளிப் போட்டிகளிலும் பிற தொடர்களிலும் தன் வயதுப் பையன்களோடு மட்டுமே விளையாடிக்கொண்டிருந்த சச்சினுக்கு CCI பயிற்சிகளிலும் போட்டிகளிலும் பெரியவர்களோடு விளையாடியது விலைமதிப்பில்லாத அனுபவமாக இருந்தது. சந்தீப் பாட்டில், ரவி சாஸ்திரி போன்ற சீனியர்களுடன் சேர்ந்து விளையாடி கலந்து பேசி தன் தவறுகளைப் புரிந்து திருத்திக் கொள்ளவும் மேலும் புதிய உத்திகளைக் கற்றுக்கொண்டு முன்னேறவும் CCI பயிற்சி நாள்கள் சச்சினுக்கு உதவின. அதேசமயம் தன் பள்ளிக்காகவும் தொடர்ந்தும் விளையாடிக் கொண்டிருந்தான் சச்சின்.

அப்போதுதான், ஒருநாள் சச்சின்விளையாடிக்கொண்டிருந்த போது அப்போதைய இந்திய அணியின் கேப்டன் திலப் வெங்சர்கார் அவனைப் பார்க்க வந்தார். மும்பை கிரிக்கெற்றின் புதிய இளம் புயலான சச்சினைப் பற்றி வெங்சர்கார் ஏற்கனவே நிறைய கேள்விப்பட்டிருக்கிறார், படித் திருக்கிறார் என்றாலும், அவன் ஆடுவதை நேரில் பார்க்கவேண்டும் என்று மிகவும் விரும்பியதால் சச்சின் விளையாடுகிற நாளாகப் பார்த்து அவரை மைதானத்துக்கு அழைத்து வர ஏற்பாடுகள் செய்திருந்தார் ராஜ்சிங் துங்கர்புர். (தொடரும்)

## கொலஸ்ட்ரோல் குறைந்தாலும் பிரச்சினைதான்...



கொலஸ்ட்ரோல் கூடினால் இருதய நோய்கள் வரும். அதே சமயம் அது மிகவும் குறைந்தால் வேறு விதமான பிரச்சினை உண்டாகும். அது "பார்க்கின்சன்" எனப்படும் மூளை வியாதி!

கலிபோர்னியாவைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தற்கொலை எண்ணங்கள், வன்முறை மனோபாவம், பக்கவாதம்,மன அழுத்தம் ஆகியவற்றுக்கும் குறைந்த கொலஸ்ட்ரோலுக்கும் தொடர்புள்ளதா? என்று கண்டறிய ஆய்வு நடத்தினர். அப்போது குறைந்த கொலஸ்ட்ரோல் மூளையின் இயல்பான இயக்கத்தைப் பாதிப்பது தெரிய வந்தது.

வயது, புகைப்பழக்கம் கொலஸ்ட்ரோலை குறைக்கும். மாத் திரை-மருந்துகள் ஆகிய எல்லாப்பிரச்சினைகளும் எடுத்து அலசப்பட்டது. அப்போது ஒட்டுமொத்த கொஸ்ட்ரோலும் குறைவாக இருந்தாலோ, அல்லது எல்டிஎல் எனப்படும் கெட்ட கொலஸ்ட்ரோல் அளவுக்கு அதிகமாகக் குறைவாக இருந்தாலோ, பார்க்கின்சன் வாய்ப்பு அதிகரிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பார்க்கின்சன் வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதடு, கை-கால்களில் நடுக்கம் ஏற்படும். மூளையில் குறிப்பிட்ட உறுப்புக்களில் உள்ள தசைகளை கட்டுப்படுத்தும் பகுதியின் இயக்கம் பாதிக்கப்படுவது தான் இதற்குக் காரணமாகும். (ற)

## அறநெறிப் பாடசாலை ஆரம்பவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் அறநெறிப் பாடசாலையின் ஆரம்பவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தாவடி மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தலைமையுரையினை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம உபதலைவர் செ.செல்வராசாவும், வரவேற்புரையை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம இணைச் செயலர் சி.சிவமோகனும்,பிரதம விருந்தினர் உரையை யாழ்ப்பாண சிவதொண்டன் நிலைய தவத்திரு .செல்லத்துரை சுவாமிகளும், சிறப்பு விருந்தினர் உரையை மருதனாமடம் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.குபேரநாதன் மற்றும் தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுலகுமரனும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக "எழுமின்! விழிமின்!" எனும் வீடியோப் படக்காட்சியும் இடம் பெறவுள்ளது. (த-9)







இலங்கை இராணுவத்தினரின் 56ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பலாலி இராணுவத் தலைமையகத்தினால் யாழ். நாகவிகாரையில் நடாத் தப்பட்ட இரத்ததான முகாமில் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்குவதையும், யாழ். பொதுசன நூலகத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பணத்தை யாழ்ப்பாண மாவட்ட இரா ணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் யாழ். பொதுநூலகர் தனபால சிங்கத்திடம் கையளிப்பதையும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் உட்பட இராணுவத் தளபதிகள் அமர்ந்திருப்பதையும்படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## தழுவல்

மனித வாழ்வியல் அபிவிருத்தியடைவதற்கு தழுவல் மிகவும் அவசியமானதொன்றாகக் கருதப்படுகிறது. இந்த ரீதியிலேயே விஞ்ஞானிகள் பறக்கும் பறவையைப் பார்த்தே விமானத்தைப் படைத்தனர் என்று சொல்லப்படுகிறது. இத்தகைய செயற்பாடுகள் போற்றப்பட வேண்டியதாகும். ஆனால் இன்றோ தமிழ்க் கலாசாரத்தையே குழி தோண்டிப் புதைக்குமளவிற்கு தழுவல்கள் தலை தூக்கியுள்ளன.

இன்றைய திரைப்படங்களில் பல்வேறு பாத்திரங்களையும் யதார்த்தமாக நடிப்பதற்காகவே நடிகர்கள் பல விதமான உடைகளை அணிவது இயல்பானதே. இதில் நடிகைகளே அடிக்கடி உடைகளை மாற்றி தான் நடிக்கும் படத்திற்கும் தமக்கும் பெருமை தேட முயற்சிக்கிறார்கள். இதை தழுவியே நமது நாட்டு நங்கையர்கள் சிலர் உடலுடன் ஒட்டியவாறு உடையணிந்து வீதிக்கு வருகிறார்கள். இவ்வுடையினால் இவர்கள் நிமிர்ந்து நடக்க முடியாமல் அவதிப்படுவதை பலர் பார்த்துப் பரிதாபப்படவேண்டியுள்ளது. இதுமட்டுமா? வாகனம் ஓட்டும் இளைஞர்களும் இவர்களைப் பார்த்து முன்னால் வரும் வாகனத்துடன் மோதிக்கொள்கிறார்கள். இந்த விபத்துக்கள் எதனால் வந்தது? தேவையற்ற தழுவலினால்தானே.

இத் தழுவல்கள் இந்தளவுடன் நின்றுவிடவில்லை. இன்னும் பல பயங்கரமான செயல்களான கொலை, கொள்ளை போன்ற நிகழ்வுகளையும் அதிகரிக்கச் செய்கின்றது. இது எங்கிருந்து தழுவப்பட்டிருக்கலாம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இருவருடங்களுக்கு முன் "பகிர்வு" என்றொரு படம் சில திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டது. அப்படத்தின் கதாநாயகன் ஒரு நாட்டுப் பற்றாளன். தான் பிறந்த ஊரைப்பார்க்கிறான். அங்கே வாழ்பவர்களிற் சிலர் பணம் படைத்த கோடீஸ்வரர்கள். பலர் பரம ஏழைகள். இந்த ஏழைகளின் பிள்ளைகள் சீதனம் கொடுக்க முடியாமல் திருமணம் இன்றி சோகமே உருவாக இருந்தனர். இந் நிலையைப் போக்குவது எப்படி? அக் கதாநாயகன் ஆழமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தான். அங்குள்ள கோடீஸ்வரர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு குறிப்பிட்ட பணத்தை அன்பளிப்பாக வாங்கி ஏழைகளுக்குக் கொடுத்து அவர்களின் பிள்ளைகளையும் திருமணம் செய்விக்கத் திட்டமிட்டான். இத்திட்டத்தை தன் நண்பர்கள் சிலருக்குத் தெரிவித்தான். அவர்களும் இதை ஏகமனதாக ஏற்றுக் கொணடார்கள். அன்றைய தினமே இதைச் செயற்படுத்தவும் ஆரம்பித்தனர். பணம் படைத்த ஒவ்வொருவரிடமும் தங்கள் திட்டத்தைச் சொல்லி உதவி கேட்டார்கள். எவருமே இவர்களின் கோரிக்கைக்கு இணங்கவில்லை.

இதனால் கோபமடைந்த கதாநாயகன் தன் திட்டத்தை மாற்றியமைத்தான். இத்திட்டத்தின் படி எவருக்குமே தெரியாமல் அவர்களிடமிருந்து பணம் கறக்கத் தொடங்கினான். இரவு நேரத்தில் எவருக்குமே தெரியாமல் தன் நண்பர்களுடன் சென்று வீட்டின் கூரையூடாக அல்லது ஜன்னலூடாக நுழைந்து ஒரு குறிப்பிட்ட தொகையை மட்டும் எடுத்துக்கொண்டார்கள்.

இப்படியே நாள்தோறும் சேர்த்த பணத்தை தம்மூரில் உள்ள ஏழைகளுக்குக் கொடுத்து சுய தொழிற் திட்டங்களை அறிமுகப் படுத்தி அவர்களின் வாழ்வை சுபீட்சமடையச் செய்தனர். சில மாதங்களிலேயே அவ்வூரிலுள்ள எல்லா மக்களும் மனம் மகிழ்ந்தனர். பெருந் தொகையான யுவதிகளுக்கும் திருமணமும் இனிதே நிறைவேறியது.

இதன் பின் இக் கதாநாயகனையும் அவனின் நண்பர்களையும் அவ்வூர் இளைஞர்களும் யுவதிகளும் எங்கு கண்டாலும் மதிப்பளித்தார்கள். தன் குறிக்கோள் நிறைவு பெற்ற பின் இக் கதாநாயகனும் தன்னூரிலேயே தான் விரும்பிய ஒரு பெண்ணைத் திருமணம் செய்து இல்லறமென்ற பூங்காவில் குதூகலமாக வலம் வந்து கொண்டிருந்தான்.

இது தான் "பகிர்வு" என்ற படத்தின் கதை. இதில் நடிகர்களோ யதார்த்தமாகவும் விறுவிறுப்பாகவும் செயற்பட்டார்கள். இன்றைய இளைய தலைமுறையினரை மிகவும் கவரக்கூடிய படமாகவே இது காணப்பட்டது.

இத் திரைப்படத்தைப் பார்த்த சில இளைஞர்கள் தான் கானமயிலாட கண்டிருந்த வான் கோழியும் ஆடுவதுபோல எம் மத்தியிலேயே. இன்று நடக்கிறார்கள்.

இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேட்கிறீர்களா...? தெருவிற் போகும் பெண்களின் கழுத்திலிருக்கும் நகைகளை அறுத்துக்கொண்டு ஓடுகிறார்கள். தெருவில் மட்டுமா? வீட்டில் தனியேயிருப்பவர்களை கொலை செய்து விட்டு கொள்ளையடிக்கிறார்கள். இத்துடன் நின்று விட்டார்களா? நவீன முறையிற் களவு, கற்பழிப்பு முயற்சிகள், இளம் பெண்களுடன் தகாத கதைகளென்று இன்னும் எத்தனையோ...? இதைவிட வீதிக்கு எவருமே வரமுடியாதளவிற்கு மோட்டார் சைக்கிள் ஓட்டங்கள். இதெல்லாவற்றையும் இவ்விளைஞர்கள் எதைப்பார்த்துத் தழுவினார்கள். பகிர்வு என்ற திரைப்படத்தில் மட்டுமா? அல்லது வேறு படங்களிலுமிருந்தா...? திரைப்படங்கள் எப்படியிருந்தாலென்ன? நாம் நல்லதை எடுத்துக் கொண்டு கெட்டதை விடவேண்டியது தானே.

பகிர்வு திரைப்படத்தில் பணக்காரரிடம் குவிந்திருந்த பணத்திற் கொஞ்சத்தைக் கிள்ளி பகிரப்பட்டதினால் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களை மனம் குளிர வைத்தார்கள். ஆனால் இங்கே என்ன நடக்கிறது? தானும் தன் குடும்பமும் உல்லாசமாக வாழ்ந்தாற் போதுமென்று நினைக்கிறார்கள். இதை நாம் ஏற்றுக் கொள்ளலாமா? இத்தகைய சுயநலத் துரோகிகள் எம்மிடையே அதிகரிப்பதற்கு தழுவல்களும் ஒரு காரணி தான்.

எழுதுமட்டுவாளூர்
எஸ்.எஸ். காசிப்பிள்ளை

# விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்க!

## இயன் மார்ட்டினிடம் ஹக்கீம் வேண்டுகோள்



(கொழும்பு)

வடகிழக்கு முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே தொடர்புகள் இருக்குமானால் அவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண்பது இலகுவானதாகவிருக்கும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் சர்வதேச் மனித உரிமைகள் அமைப்பின் ஆலோசகரான இயன் மார்ட்டினிடம் எடுத்து விளக்கியுள்ளார்.

இலங்கை வந்துள்ள இயன் மார்ட்டின் நேற்று முன்தினம் பிற்பகல் ரவூக்ஹக்கீமைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இதன் போதே இவ்விடயத்தை ரவூப்ஹக்கீம் எடுத்துக்கூறினார்.

தற்போதைய நடைமுறையின் படி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கிடையிலான தொடர்புகள் சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாகவே மேற்கொள்ளப் படுகின்றன.

விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்பினை ஏற்படுத்துவது குறித்து நீங்கள் கிளிநொச்சி செல்லும்போது கவனத்தில் எடுத்து பேச்சுநடாத்த வேண்டும் எனவும் இயன் மார்ட்டினிடம் ரவூப்ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற-4)

# தனது தார்மீகப் பொறுப்பிலிருந்து நழுவுகிறது பி.பி.சி செய்திச் சேவை

## யாழ். மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தில் நடைபெறும் நிகழ்வுகளை பி.பி.சி செய்திச்சேவை இருட்டடிப்புச் செய்து வருதுடன், பக்கச் சார்பாகச் செயற்பட்டுவருவதாகவும் தெரிவித்து யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் பி.பி.சிசெய்திச் சேவைக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும்,

தமது வாழ்வுரிமைக்காகப் போராடும் இனத்தின் பதிவுகளை சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவப் படுத்தி செய்திகளை வெளியிட்டுவரும் வேளையில் தங்களது ஒலிபரப்பு நிறுவனம்(பி.பி.சி) தமிழர் தாயகத்தில் நடைபெறும் நிகழ்வுகளை இருட்டடிப்புச் செய்தும், வெளியிடாமலும் ஒரு பக்கச் சார்பாக நடந்துவருகின்றன. இது தமிழர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்த வருகின்றன. இது குறித்து யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தனது ஆழ்ந்த கவலையை தெரிவிக்கின்றது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதி தமிழர்களின் தாயகமாகும். இங்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள், விடுதலைக்கான போராட்ட நிகழ்வுகள், தமிழர்களின் உரிமைக்குரலான பொங்கு தமிழ் நிகழ்வுகள் என ஏராளமான நிகழ்வுகள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக எந்த ஒரு செய்தியையும் பி.பி.சி வெளியிடவில்லை என்பது தெட்டத்தெளிவாக எமக்குத் தெரிகின்றது.

தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவ வகை செய்தல் வேண்டும் என்ற குரல் முழக்கமிட்டு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் பி.பி.சி அந்த தார்மீகப் பொறுப்பை மறந்து எமது மண்ணில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒலி பரப்பாமல் புறக்கணித்து வந்துள்ளது. மெய்யான செய்திகளை மூடி மறைத்து பக்கச் சார்புடன் செய்திகளை வெளியிட்டுவருவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு படைகளின் யுத்தத்தால் துன்பமான வாழ்வை சுமந்து நிற்கும் தமிழ் மக்களின் மெய்யான நிலைப்பாட்டை வெளியிட மறுத்து பக்கச் சார்புடைய செய்தி நிறுவனமாக மாறிவிட்டதா என எம்மை சந்தேகம் கொள்ளவைக்கின்றது.

இது தொடருமானால் பி.பி.சி அதன் தனித்துவத்தை இழந்துபோக நேரிடும். இனி வரும் காலத்திலாவது நடுநிலைமையுடன் நடந்து தமிழர் தாயகத்தில் நடைபெறும் நிகழ்வுகளை ஒலிபரப்புச் செய்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த)

# தடுப்புக்காவலில் உள்ள ஒருவரின் நிலையை ஆராய அதிகாரம் உள்ளது

## மனித உரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

மனித உரிமை ஆணைக்குழுவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள எந்தவொரு நபரினதும் நிலைமை குறித்து தேவையான எந்த நேரத்திலும் ஆராய முடியும் என்று அதன் தலைவர் கலாநிதி ராதிகா குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஜே.தங்கவேலு மற்றும் மூத்த பொலிஸ் அதிகாரி டி.எஸ்.எஸ்.லுகொட ஆகியோருடன் ராதிகா குமாரசுவாமி ஆலோசனை நடத்தினார். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் நிலைமை குறித்து ஆராய்வதற்காக மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்கள் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்கையில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இங்கு ராதிகா குமாரசுவாமி மேலும் கூறுகையில் மனித உரிமை ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரிகளினால் நீதிமன்ற உத்தரவிற்கமையவோ அல்லது அவ்வாறு இன்றியோ தடுப்புக்காவலில் உள்ள நபரின் நிலைமை குறித்து ஆராய முடியும்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு சட்டத்தன் மூலம் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா என்பது பற்றி அறிந்து கொள்வதற்காகவே மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் அவர்களைச் சந்திக்கிறார்கள். பொலிஸாரின் கடமைகளில் குறுக்கீடுசெய்வதற்காக அல்ல.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அல்லது பொது மக்கள் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் எவரையேனும் கைதுசெய்தால் கைதுசெய்து 48மணி நேரத்தினுள் அது பற்றி மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கவேண்டும்.

ஆணைக்குழு சட்டத்தின் 28(3) பிரிவிற்கமைய ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள பணியை நிறைவேற்ற தடைவிதிக்கும் அல்லது குறுக்கீடு செய்யும் அதிகாரிகளை நீதிவானிடம் முன்னிலைப்படுத்தி வழக்குத்தொடரமுடியும். அங்கு அவர் குற்றவாளி என உறுதிப்படுத்தப்பட்டால் அபராதம் விதிக்கவோ அல்லது ஒருவருட சிறைத் தண்டனை விதிக்கவோ முடியும். அரசியல் அமைப்பின் படி உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிபபடை உரிமைகளை பாதுகாத்தல், அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பும் கடமையுமாகும் என்றார். (த)

# வலது குறைந்தோருக்கான விசேட செயற்திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் வலது குறைந்தோர் தொடர்பாக ஒழுங்கு முறையிலான ஆய்வு ஒன்றினை சுகாதார அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் வலது குறைந்தோருக்கான பிரிவு சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்த ஆய்வினை நடாத்தவுள்ளது.

நாட்டில் விபத்துக்கள், நோய்கள், யுத்தம் உட்பட பல்வேறு காரணங்களினால் வலது குறைந்தோர் அதிகரித்துக் காணப்படுகின்றனர்.

வலது குறைந்தோருக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கென இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் போதியளவானதாக இல்லை.

எனவே புதிய திட்டத்தின் மூலம் வலது குறைந்தோருக்கு ஒழுங்குமுறையிலான ஆலோசனைகள், மருத்துவ உதவிகள் என்பன வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# அன்பளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

2ஆம் லெப்.மாலதியின் நினைவு நாளினையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளினையும் முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தென்மராட்சி கிளையினரால் தென்மராட்சியில் உள்ள தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் முன்பள்ளிகளில் கற்பிக்கும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் சிலருக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்குகின்ற நிகழ்வும் இன்று காலை 11.00மணிக்கு சாவகச்சேரி தமோதரம்பிள்ளை வீதியில் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

# பேசும் தூரிகை ஓவியக் கண்காட்சியில் ஓவியர் வாசனின் ஒப்பற்ற வடிவங்கள்...

காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்களில் முகிழ்நிலை ஆசிரியர் எஸ்.என்.வாசனின் கலைப்படைப்புக்களின் பன்முகத்தன்மையைக் காணக் கூடியதாக இருந்தது. கல்லூரி வளாகத்தில் கவனிப்பாரின்றிக் கிடக்கும் கழிவுப்பொருட்கள் பல இவரது கைவண்ணத்தினால் கலைவண்ணமாகியிருக்கின்றன. சிறிய வயதாயினும் ஓவியத்துறையில் மிகுந்த பரிட்சயமும் பக்குவமும், பண்பும் அவரிடம் புரையோடியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சின்னக் கலைஞனின் மகத்துவப் படைப்புகள் பற்றி இங்கு காண்போம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் சித்திரக் கலைத்துறையினரின் 'பேசும் தூரிகை' எனும ஓவியக் கண்காட்சி கடந்த 7,8,9 ஆம் திகதிகளில்நடைபெற்றது. இதன்தொடக்க நாள் நிகழ்வில் 'துகிலிகை' எனும ஓவியச் சஞ்சிகையும (காலாண்டிதழ்) வெளியிடப்பட்டது.



இரண்டாம் உலக மாகயுத்தம் ஏற்படுத்திய வடுக்களால் சமநிலையற்ற சர்வசேத பொருளாதார அரசியல் போக்குகளும், 19ஆம் நூற்றாண்டின் பின்னர் புகைப்படக் கருவியின் வருகையும் கலைப்படைப்புகளிலே பல்வகைத் தாக்கங்களை விளைவித்திருக்கின்றன.

ஓவியத்தில் யதார்த்தவாதப் பண்புகள் அருகி இயற்கையின் புறத்தோற்றத்தை அகற்றி அகநிலைப்பட்டதான ஓவியத் தழுவல்களிலே மேற்கத்தைய ஓவியக்கலை அதிகம் மூழ்கியிருக்கின்றது.

"ஓவியத்தின் பணி வெறுமனே புற உலகின் தோற்றத்தைப் பிரதிமை செய்வதோ அல்லது மெய்யான நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதோ அல்ல. அது முற்றிலும் ஒரு கட்புலத்தோற்றத்தைத் தர வேண்டும்" என்கிறார் வெளிப்பாட்டுவாத (Expressionism) ஓவியர் போல்கிளி.


மேற்கத்தைய ஓவியப்போக்கிலான, இவ்வாறான முகிழ்ப்பு கீழைத்தேய ஓவியப் புலங்களில் படர்வது தவிர்க்க முடியாததொன்றாகிறது. இவ்வகையிலேதான் ஓவியர் வாசனின் படைப்புக்களையும் அணுக வேண்டியதாகின்றது.

வாசனின் படைப்புக்கள் வெறும் தூரிகை யோட்டங்களிலான வர்ணப் பூச்சுகள் அல்ல. அவை, கட்புல வீச்சுக்கு அப்பால் பல கருத்துக்களைக் காவிச் செல்லும் காத்திரப்பாங்குடையவை.கோடுகளாலும் வர்ணங்களாலும் உருவங்களாலும் வெளிப்படுத்தப்படுவதே ஓவியம் என்ற மரபுச் சிந்தனையிலிருந்து மாறுபட்டதாக இவரது படைப்புக்கள் விளங்குகின்றன. அரிமரத்தூள், பிளாஸ்ரர்ஒவ் பரிசு, கடுதாசி, துணிகள், கம்பிச்சுருள், ஆணி, இறந்த உயிரிகளின எச்சங்கள் போன்ற பல வெவ்வேறான ஊடகங்களையும், ஒன்று சேர்த்து ஓவியத்தினது திணிவையும், மேற்பரப்பையும் மாற்றியமைப்பதனூடாக ஓவியப் பரிமாணத்தில புதியதோர் புகுதலைக் காட்டியுள்ளார்.



'கறுத்த கடல்'





'யுத்தப்பூக்கள்'

"கலை தன்னளவில் பெறுமதியானது. அதற்கு அப்பாறப்பட்டது வேறெதுவுமில்லை" என மேற்கததைய அரூப (Abstract) ஓவியர்கள் க்லையின் பெறுமதியை விதந்து குறிப்பிட்டிருக்கின்றார்.

வாசனின் ஓவியங்களும் இவ்வாறே உயர்ந்த உள்ளுணர்வை ஏற்படுத்தி விடுகின்றன. இவற்றைக் கண்ணுறும் போது அதன் ஆழம் நெஞ்சை நெருடி விடுகின்றது. கரிய் கடலெனும் காட்சிப் படிமம் (ஸ்தாபனக்கலை) சுனாமி ஆழிப்பேரலையின் அவஸ்தையை மீண்டும் அரங்கேற்றுகிறது.

செத்துப்போகும் யுத்தப் பூக்களைச் சப்தம் போடாமல் சாடியில் வைத்திருப்பது அவனது உயர்ந்த சித்தம்.

சீதன வேதனத்தால் தன்னை இழக்கும் ஆணவனை எரித்துக்காட்டுவது ஓவிய மரபில் யாருக்கு இயலும்?

இவ்வாறு பல புலங்களில் களமாகும் மிகுதியைக் காட்சிக்கூடத்தில் தரிசிட்டபவர்கள், காணாத கண் என்ன கண்ணோ' என்றே கூறுவர் என்பது திண்ணம். □

க.ரட்ணேஸ்வரன்
(கல்விடலாளர்)
சித்திரக்கலைத்துறை
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## வாணி விழா

இளங்கலைஞர் மன்றத்தினர் நடாத்திவரும் வாணிவிழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.25 மணிக்கு மங்கல விளக்கேற்றத்துடன் ஆரம்பமாகி 5.30 மணிக்கு மன்ற இசைவகுப்பு மாணவர்கள் வழங்கும் குழுப்பாடலும் 5.45 மணிக்கு எஸ். கிருஷ்ணானந்தன் குழுவினரின் இசைக்கச்சேரியும 6.30 மணிக்கு கவிஞர் சோ.பத்மநாதனின் "வெள்ளைக கமலத்திலே" என்னும் கவியரங்கமும் இரவு 7.15 மணிக்கு பிரதம விருந்தினரான யாழ்மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானத்தின் உரையும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு பொன்னாலை பரத கலாலயம் வழங்கும் ஸ்ரீதேவி கண்ணதாசனின் நாட்டியாஞ்சலியும் இடம்பெறவுள்ளது.(த-9)

# புதிய தொழில்நுட்பங்களை எதிர்க்கிறார் பிரேசில் கால்பந்து வீரர் ரொனால்டோ

கால்பந்து விளையாட்டில் காதில் கடுக்கன பந்தில் கம்பியுடர் சிப், செயற்கையான மைதானம் போன்ற புதிய தொழில்நுட்பங்கள தேவையில்லை என்கிறார் ரொனர்ல்டோ,


களத்தில் இருக்கும் வீரருக்கும் பயிற்சியாளருக்கும் தொடர்பு ஏற்படுத்த கடுக்கன் முறை அறிமுகமானது. அதாவது வரர் தனது காதில் எலக்ரோனிக் கடுக்கன் அணிந்து கொள்வார். இதன்மூலம் இவரை பயிற்சியாளர் வாக்கிடோக்கி மூலம் தொடர்புகொள்ள முடியும். இந்த முறைக்கு பிரேசில் நாட்டில் அதிக வரவேற்பு இல்லை. இது பற்றி அந்த அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டோ பின்வருமாறு தெரிவித்தார்.



காதில் ஏதாவது ஒன்றை அணிந்து விளையாடுவது மிகவும் கொடுமையானது. இதனால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை. பயிற்சியின் போது சொல்லிக்கொடுத்ததை பின்பற்றினாலே போதும். வீரரின் திறமையை பொறுத்துத்தான் முடிவு அமையும். பயிற்சியாளர் வாக்கி டோக்கி மூலம் தரும் ஆலோசனை எல்லாம் பலன் தராது.

'பிபா' அறிமுகப்படுத்திய கம்பியூட்டர் சிப் அடங்கிய பந்து செயற்கை இழையிலான மைதானங்களில் அதிக ஆர்வம் இல்லை. இதைக் காட்டிலும் எளிதான முறை உண்டு. அது நடுவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தான் இருவர் விளையாடும் போட்டிகள்ல கூட நிறைய நடுவர்கள் இருக்கிறார்கள். ஆனால் கால்பந்தில் இரண்டு லைன்ஸ்மேன், ஒரு நடுவர் மட்டுமே உள்ளனர். இவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தால் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். செயற்கை இழையிலான மைதானங்களில் பயிற்சி செய்திருக்கிறேன். ஆனாலும், புல் தரையில் விளையடுவது தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்று ரொனால்டோ தெரிவித்தார். (த-19)

# ஆசியத் தொடரில் வெல்வோம் என்கிறார் இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோன்



பாகிஸ்தான் இந்திய சுற்றுப்பயணத்திலும் வெற்றிகளைக் குவிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார் இங்கிலாந்து கப்டன் மைக்கல்வோன்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கிறது. இதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு இந்திய அணியுடன் இரண்டு தொடர்களிலும் மோதவுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றி நடைபோட்டு வரும் இங்கிலாந்து அணி இந்த 2 தொடர்களையும் சவாலாகவே எண்ணி வருகிறது. சொந்த மண்ணில் இருவரும் ஜாம்பவான்கள் என்றாலும் இளம் வீரர்கள் சாதிப்பார்கள் என்கிறார் இங்கிலாந்து கப்டன் மைக்கல்வோன்.

கடந்த 2 ஆண்டுகளாக இங்கிலாந்து அணி எதிர்த்த அணிகளை எல்லாம் வீழ்த்தி தொடர் வெற்றிகளை பெற்று வருகிறது. இது அடுத்த 2 ஆண்டுகளுக்கும் தொடரவேண்டும் என்பதே எனது விருப்பம். இளம் வீரர்களை கொண்ட எங்கள் கூட்டணி இன்னும் பல ஆண்டுகள் நீடிக்கும் என்பதால், இது எளிதில் சாத்தியம் ஆகும். எங்களின் சாதனைப்பாதைகளுக்கு தனிப்பட்ட முறையில எந்த வீரரையும் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அனைவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

இதுவரை விளையாடிய போட்டிகளில் செய்த தவறுகளை திருத்திக்கொள்ள முயல்கிறோம். இப்போது எங்களுக்கு 2 முக்கிய சவால்கள் காத்திருக்கின்றன. முதலில் பாகிஸ்தான் மண்ணில் தொடரை வெல்ல வேண்டும் அடுத்ததாக இந்திய சுற்றுப்பயணத்திலும் சாதிக்க வேண்டும். இந்த 2 பயணங்களிலும் முத்திரை பதிக்க எங்கள் கூட்டணி தயாராகி விட்டது என்று தன்னம்பிக்கையுடன் பேசுகிறார் மைக்கல்வோன். (த-19)

# விளையாட்டு செய்திகள்





ஏழாவது இந்திராகாந்தி தங்கக் கோப்பைக்காக சர்வதேச மகளிர் ஹொக்கிப் போட்டியில் அவுஸ்திரேலியா இந்தியாவை 5:3 என்ற கோல கணக்கில் வெற்றி பெற்று தகங்கக்கோப்பையை பரிசாகப பெற்றுக் கொண்டது.

# கப்டனாக வர விரும்புகிறார் இந்திய வீரர் யுவராஜ் சிங்



இந்திய அணித்தலைவர் கங்குலி - பயிற்சியாளர் சப்பல் பிரச்சினையால் அணியில் பிளவேதும் இல்லை. நான் அணித்தலைவராக இருந்தால் அணி வீர்களை அழைத்து பிரச்சினையை சுமூகமாக தீர்ப்பேன் என்கிறார் இந்திய வீரர் யுவராஜ்சிங்.

இந்திய கிரிக்கெட் அணியின் விளாசல் வீர் யுவராஜ் சிங்கிடம் கங்குலி- சப்பல் இடையே நிலவிவரும் பிரச்சினை தொடர்பாகவும், வீர்களிடையே நிலவிவரும் குழப்பம் மற்றும் அணியின் எதிர்காலம் தொடர்பாகவும் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பின்வருமாறு பதிலளித்தார்.

கங்குலி- சப்பல் பிரச்சினை அனைத்து வீர்களையும் பாதிக்கும செயல் ஆகும். ஆனால் நடந்தது நடந்து முடிந்துவிட்டது. பழைய கசப்பான சம்பவங்களை எல்லாம் மறந்து வீரர்கள் அணியின் வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்றார்.

சப்பல் வீர்களை பயிற்சியில் வாட்டி வதைப்பது தொடர்பாக கேட்டபோது, என்னைப் பொறுத்தவரையில் உடல் தகுதி குறித்து சபபல் தரும் பயிற்சிகள் கடினமானதாக இல்லை.

வீரர்கள் பயிற்சியின் போது மகிழ்ச்சியாகவே உள்ளனர். வீரர்களின் உடல் தகுதியும் இதன்மூலம் மேம்பட்டிருக்கின்றது என்றார்.

மேலும் இந்திய அணி கடந்த காலங்களில் ஒருநாள் போட்டிகளில் நன்றாகத்தான் விளையாடியது. ஆனால் இந்த ஆண்டு மோசமான நிலையை அடைந்துள்ளது எனவும் தெரிவித்தார். (த-19)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்




## எம்மை மீண்டும் புன்னகையிடம் அழைத்துச் செல்லுங்கள்



குடும்பத்தில் மூத்தவர்களும் பொறுப்பானவர்களும் இழக்கப்பட்டதால் பல சிறுவர்கள் குடும்பச் சுமையை தாங்குவதிலும் பங்கெடுக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. தமது குடும்பத்தவர்களுக்காக தொழிலில் ஈடுபடவும் சில சிறுவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவ்வாறு சிறுவர்கள் தமது உணர்வுகளை தாராளமாக வெளிப்படுத்த பல வழிகளை நாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். சில அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள் அவர்களுடன் விளையாடுவது நல்ல மகிழ்வையும் அமைதியையும் தருவதாக கரன் (வயது 12) கூறுகிறான். கதைப்பது, கதை சொலவது, நாடகம், பாடல் ஆடல் என பல முறைகளில் சிறுவர்களை ஆற்றுப் படுத்தலாம் என அனர்த்த கால முகாமைத்துவம் பற்றி எழுதப்பட்டுள்ள நூலில் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. பிள்ளைகளுடன் கணிசமான நேரத்தை ஒதுக்கி இருப்பதன் மூலம் பாதிப் படைந்தவர்களை இனங்காணவும் உதவி செய்யவும் முடியும். பிள்ளைகளை இயல்பு வாழ்க்கைப் பிரிவுகளுக்காக மாற்றீடுகளை மேற்கொள்வதும் காலத்தின் தேவையாக உள்ளன.



**தொகுப்பு ரீ.ரீ.மயூரன்**



இவ்வாறு அனர்த்த ஞாபகங்களுக்கு உட்பட்டவர்கள் தமது ஆழ் மனது வேதனைகளையும் தாக்கங்களையும் பல்வேறு வழிகளில் வெளிப் படுத்துகின்றனர். இங்கே சிறுவ்ரால் கரும்பலகையில் எழுதப்பட்டுள்ள சுனாமி மீண்டும் வருமா? என்ற வாசகம் சாதாரணமாக எழுதப்பட்ட ஒன்றல்ல?



அவ்வாறான முயற்சிகளை எமது சகோதரர்களுக்காக நான் வரவேற்பதாக சொல்கிறானே இச் சிறுவன்?




எங்கள் மீது கரிசினையாக இருப்பதும் ஆர்வமாக இருப்பதும் எம்மை மீண்டும் புன்னகைக்கு கொண்டு செல்ல உதவும் என கூறும் இச் சிறுமியின் கருத்து ஒவ்வொருவருக்கும் சொல்லப்பட வேண்டியதே.


பெரியோர்களே! உங்கள் குடும்பங்களின் சொத்து சிறுவர்கள் மட்டுமே. வருமானம் வாழ்க்கையை கொண்டு நடத்த முக்கியம்தான். ஆனால் அதுவே ஒரு பிள்ளையின் வாழ்க்கையை பறித்து விடாதபடி பாருங்கள். கல்வியை விட்டு வேலைக்கு போகும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பிவிட்டு அவர்களுக்காக கொஞ்சம் கூடுதலாக பாடுபடுங்களேன். நாளை எதிர்காலம் உங்களை நன்றியுடன் பார்க்கும்.



சிறுவர்களே!! நீங்கள் உங்கள் சகோதரர்களிடமும் நண்பர்களிடமும் நேசமாக இருங்கள். உங்களில் சிலர் நெருக்கீடுகளின் வேதனைகளில் இருப்பவர்களாக இருக்கலாம். உங்களின் நெருக்கமும் அரவணைப்பும் அவர்களை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டுவர உதவும்.



என்றும் இந்தச் சிறுவர்கள் இதே மகிழ்வுடன் வாழ எம்மாலியன்றதெல்லாவற்றையும் இன்றே செய்வோம்.!



சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# ஈழத்தமிழரும்

இலங்கை ஜனாதிபதி-சிறுபான்மை இனத்தின் மீது கூட்டான சித்திரவதைகளுக்கு அதிகாரம் அளிப்பவர். அத்தகைய அதிகாரத்தினை தெரிந்தெடுப்பதற்கு வடக்கு-கிழக்குத் தமிழர்களை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்குமாறு கூறுவது பொல்லைக் கொடுத்து அடிவாங்குமாறு சொல்வது போல் உள்ளது. மேலும் இது அரசியல் முதிர்ச்சி இன்மையின் வெளிப்பாடாகும். உதாரணமாக யாழ்.குடாநாட்டின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து உள்ள இலங்கை முப்படைகளுக்கும் ஆணையிடும் புதிய தலைவரை தெரிவு செய்ய வடக்கு-கிழக்கு மக்கள் வாக்களிப்பார்களாயின் அது இலங்கை இராணுவத்தினர் ஆக் கிரமிப்பை அங்கீகரிப்பதாகவே இருக்கும்.மேலும் இலங்கை அரசியலமைப்பில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டுள்ள போது அதனை ஜனநாயகம் என்றோ இலங்கை பாராளுமன்றை கூடிக் கதைப்பதற்காக உயரிய இடம் என்றோ எண்ணுவது எம்மை 1977ஆம் ஆண்டுக்குப் பின் தள்ளும். மீண்டும் தமிழர் மீது காட்டாட்சி நடத்தும் அவசரகாலச்சட்டம் பாராளுமன்றில் இயற்றப்பட்டபோது, தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இன்றியே செயற்படுத்தப்பட்டபோது, அது சிறுபான்மை இனம் மீது பொரும்பான்மை இனம் பிரயோகிக்கும் கூட்டு சமூகவன்மத்திற்கு உரிய ஜனநாயக அங்கீகாரமாகும்.

இலங்கையில் தமிழர் மீதான சமூக வன்மங்களாக வாழ்விடம் அகற்றல், தொழில் செய்யும் இடங்கள் அபகரிப்பு, உயிருக்கு தீங்கு விளைவிக்கும் ஆபத்தான வெடிபொருட்கள், தனிக்கொலை, ஆயுதங்களினதும் பல கொலை ஆயுதங்களினதும் கட்டுப்பாடற்ற பிரயோகங்களும் அமைகின்றன. பலகோடிக்கணக்கான பெறுமதியான ஆயுதங்களும், 2 இலட்சம் சிங்கள இராணுவமும் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழினத்தை அழிக்கும் தொழிற்பாட்டு சின்னமாக உள்ளது.

மனிதநேயமற்ற வன்முறைகள் நேரடி சமூக வன்மங்களாகவும் இடப்பெயர்வு, போக்குவரத்துக்கட்டுப்பாடு, ஆழிப்பேரலை நெருக்கீட்டிற்கு பின்பான புனரமைப்பில் ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றத் தடை என்பன மறைமுக சமூக வன்மங்களாக அமையும்.

இவ்வாறாக சிறுபான்மை இனம் மீது பிரயோகிக்கப்படும் கூட்டான சித்திரவதையினை இன்றைய நவீன தகவல் தொழில் நுட்ப யுகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்த ஒரு இனத்திற்கும் ஒரு செயலை நடைமுறைப்படுத்தச் சுயமாகக் தீர்மானிக்கும் உரிமை உண்டு. அவர்கள், உடலாலோ உள்ளத்தாலோ தீங்கு செய்யப்படக் கூடாது.

ஏற்படுத்தப்படும் தீர்மானங்கள் நன்மை பயக்கும் தீர்மானங்களாக அமையவேண்டும். பக்கஞ் சாராத்தன்மையைக் கொண்டதாக அமையவேண்டும்.

ஆனால் இலங்கை அரசியல் தலைமைகளால் அதனைக் கொடுக்க முடியாது அவர்களிடம் அதற்குரிய வெற்றிடம் காணப்படுகின்றது அதனை விளங்கக்கூடிய பக்குவம் அவர்களிடம் இல்லை. ஆனால் தமிழ் மக்கள் கட்டாயம் அதனை விளங்கிக்கொள்ள வேண்டும் அன்றேல் காலங்காலமாக கையில் அடையாள அட்டையுடனும் பையில் குடும்பப்பதிவுடனும் அலைய வேண்டி நேரிடும்.

பூக்கத் தொடங்கிய புதிய தலைமுறையினை கூட்டி நடக்கத் தவறின் ஊட்டி வளர்க்காத பாவியாவோம் என்ற வியாசரின் கவிதை தற்போதைய யாழ்.குடாநாட்டை 20வருடங்களிற்கு முன்புள்ள நிலையுடன் ஒப்பிடவைக்கிறது. அன்று வீதிகளில் போராளிகளின் படங்களே இருந்தன. ஆனால் இன்று வீதிகளில் கவர்ச்சி விளம்பரப்படங்களே உள்ளன. இந்நிலையில் அரசியல் சிந்தனையினை இளைய தலைமுறை நோக்குமா என்ற கேள்விக்குறி உள்ளது.

அரசியல் வேண்டப்படாத கல்வி அல்ல. நல்ல சமூக வாழ்வுக்கு சிறப்பான அரசியல் அறிவு அவசியம். அரசியல் அறிவு அற்ற சூழலிலேயே பல நூற்றுக்கணக்கான சிறுவர் இளைஞர்களை இந்திய அரசும் இலங்கை அரசும் பலிக்கடா ஆக்கியது. அதேநிலைமை மீளவும் வருவதற்கு நாம் இடமளிக்கக்கூடாது.

தென்னிலங்கையில் அரசியல் பௌத்த மதகுருமாரினால் போதிக்கப்படுகின்றது. அங்கு உண்மையில் போதிக்கப்படுவது பௌத்த தர்மம் அல்ல. ஆனால் பௌத்தத்திற்கு முன்பான சமூக வன்மம். அதாவது அசோகன் பௌத்த மதத்தை பரப்புவதற்குமுன் இலட்சக்கணக்கானோரை கொன்றும் இலட்சக்கணக்கானோரை இடம் பெயரச் செய்தும் சமூக வன்மத்தை ஏற் படுத்தினான். அதன் பின்பே பௌத்தத்தை பரப்பினான். அதனையே இலங்கையை ஆளும் ஆட்சியாளர்கள் செய்தனர். இனி வருபவர்களும் அதனையே செய்வர். இதில் யார் கூடுதலாக பௌத்தர் அல்லாத சிறுபான்மைத் தமிழருக்கு அழிவை ஏற்படுத்து வார்களோ அவர்களே நாட்டிற்குத் தலைமைதாங்குவர். இத் தெரிவிற்கான போட்டியே இலங்கை ஜனாதிபதித் தேர்தல். இதில் சிறுபான்மைத் தமிழர்கள் அரசியல் இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிகள் போன்றவர்களே. அதாவது ஒரு பக்கம் போனால் திருகிச் சாகடிக்கப்படுவர். மறுபக்கம் போனால் வெட்டிச்சாகடிக்கப்படுவர் ஏனெனில் இலங்கை அரசிய்லில் தமிழர் உயிர்வாழ்வதற்கான அதிகாரம் இல்லை.

சர்வதேசம் தமிழர் போராட்டத்தைப்பற்றி விழிப்படைந்த நிலையில் நாமும் ஆக்கபூர்வமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலேயே எமது உரிமைகளைப் பெறலாம். அதற்கான உரிமைக் குரலாக எமது நிலத்தினை ஆக்கிரமித்த படைகள் அகன்றாலேயே தேர்தலில் பங்களிக்கலாம். அன்றேல் ஐக்கிய இலங்கையில் சுதந்திர தமிழ்தேசம் உருவாக வேண்டிய அவசியம் பற்றிய கோரிக்கையினை சிங்கள மக்களினி பொதுக்கருத்திற்கான சந்தர்ப்பமாக உபயோகிக்கலாம்.

# இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலும்

டாக்டர் சி.யமுனானந்தா

# தேர்தல் வெற்றியை தீர்மானிப்பதற்கு ஜே.வி.பி, ஹெலஉறுமயவின் பங்களிப்பு முக்கியம்

## அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

இலங்கை அரசியலில் தேர்தல் வெற்றிகளை தீர்மானிக்கும் போது ஜே.வி.பி,ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்திருக்கின்றது என்று அரசியல் பகுப்பாய்வாளர் பந்துல்ல வெல்லால தெரிவித்துளளார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டது.

கிழக்கு மாகாணத்தில் ரவூப் ஹக்கீம் குழு தமது முஸ்லிம் காங்கிரஸ் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளில் 2 சதவீதத்தை மாத்திரமே பெற்றது.

ஐக்கிய தேசியக்கட்சி 37.83வீத வாக்குகளைப் பெற்றது. ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், மலையக மக்கள் முனனணி ஆகியனவற்றின் ஒத்துழைப்புடன் தாம் வெற்றி பெற்றதாக ஐக்கிய தேசியக்கட்சி கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாது என அரசியல் பகுப்பாய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எனற பெயரில் பொதுஜன ஐக்கிய முன்ன்ணியும், ஜே.வி.பியும் இணைந்து போட்டியிட்டபோது இரு கட்சிகளும் 45.6சதவீத வாக்குகளைப் பெற்றன. தற்போது ஜாதிகஹெல உறுமயவும் கூட்டணியில் சேர்ந்துள்ளது. இந்தக் கட்சி கடந்த தேர்தலில் 6 சதவீத வாக்குகளைப் பெற்றது.

இந்த மூன்று கட்சிகளின் வாக்குகளைப் கூட்டிப்பார்க்கும் போது இந்தக் கூட்டணிக்கு 51.6 சதவீத வாக்குகள் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# ஆழ்கடல் அதிசயங்கள்

கடலின் ஆழத்தை நாம் நான்கு பாகங்களாகப் பிரிக்கலாம். நீரின் மேற்பரப்பிலிருந்து 200மீற்றர் ஆழம் வரை இருப்பது மேற்பகுதி. 200 மீற்றரிலிருந்து 1000மீற்றர் ஆழத்திலிருப்பது நடுப்பகுதி. 1000மீற்றரிலிருந்து 4000மீற்றர் வரை இருப்பது ஆழ்கடல் பகுதி. 4000மீற்றருக்கும் மேல் ஆழமிருக்கும் பகுதி அடி ஆழப் பகுதி.

சூரிய ஒளியின் தாக்கம் கடலின் மேற்பகுதியில் ஓரளவுக்கு சென்றடைகிறது. நடுக்கடல் ஆழங்களில் ஒளி மிகவும் மங்கலாகத்தான் தெரியும். இந்தப் பகுதியிலிருந்து கடலின் ஆழ்பகுதி மற்றும் அடி ஆழ்பகுதிகளைப் பார்த்தால் கும்மிருட்டாகத்தான் இருக்கும். ஒளி மிக மங்கலாக இருப்பதால் இந்தப் பகுதிகளிலுள்ள பல உயிரினங்களுக்கு மின்மினி பூச்சிகளைப் போல இயற்கையாக ஒளியை உடலிலிருந்து உருவாக்கிக்கொள்ளும் திறன் உள்ளது.

கடலின் ஆழத்திற்குச் செல்ல செல்ல உயிரினங்களின் எண்ணிக்கை குறைவதால் அந்தப் பகுதியில் வாழும் உயிரினங்களுக்கு உணவுப்புற்றாக்குறை ஏற்படும். இதற்காக இங்கு வாழும் உயிரினங்கள் இரவு நேரங்களில் மட்டும் உணவுக்காக கடலின் மேற்பகுதிக்கு சென்று வருகின்றன. மேலும் இங்கு வாழும் உயிரினங்கள் அனைத்தும் வேட்டையாடும் வகையைச் சேர்ந்தவையாகும். பெரும்பாலும் இவை தங்களைவிட பெரிய உயிரினங்களையே உண்பதால் இங்குள்ள உயிரினங்களுக்கு நீண்ட கூரான கோரப்பற்களும், ரப்பர் போன்று எளிதில் விரிந்து சுருங்கும் வாயும் வயிற்றுப்பகுதியும் இருக்கும். இப்பகுதியில் வாழும் சில வித்தியாசமான உயிரினங்களைக் காண்போம்.

**பெருந்தொண்டை மீன்கள்:-** இவற்றின் பெயருக்கேற்றாற் போல் பெரிய செதில்கள் இருக்கும். மற்ற மீன்களைப்போல் வழு வழுப்பாக இல்லாமல் மிகவும் கரடுமுரடாக தோற்றமளிக்கும். இவற்றால் மேற்பகுதி மீன்களைப் போல் வேகமாகச் சென்று வேட்டையாட இயலாததால் இவை இருட்டில் மறைந்திருந்து திடீரென்று தாக்கி வேட்டையாடும்.

**டேனோபோர்:-** இவை ஜெல்லி மீன்களின் தூரத்து உறவாகும். மெல்லிய நூல் போன்ற எட்டு கரங்களைக்கொண்டு சிறிய மீன்களை இவை வேட்டையாடும். சில சமயம் எதிரிகளிடமிருந்து தப்பிக்க திடீரென பளீரென்ற ஒளியை உமிழ்ந்து எதிரிகளைப் பயமுறுத்தும்.

**கடல் மின்மினி:-** இவற்றின் உடலில் தலை, உடல், கண், கால்கள். ஆகிய பகுதிகள் அனைத்திற்கும் தனித்தனியே ஒளி வீசும் திறன் உள்ளது.

**ஈட்டி மீன்:-** இவை மிகவும் பயங்கரமான வேட்டைப் பிரியர்களாகும். இவற்றின் கீழ்த் தாடைப் பகுதியிலுள் கூரான ஈட்டிபோன்ற பகுதியைக் கொண்டு இரையைக் குத்திக் கொல்கின்றன. இதே பகுதிகளில் வாழும் டிராகன் மீன்களுக்கும் நீண்ட கூர்பபற்களும், மிகப்பெரிய வாய்ப்பகுதியும் இருக்கும். இவை இரண்டிற்கும் கண்ணை சுற்றியுள்ள பகுதியிலிருந்து ஒளி தோன்றும்.

**ரிப்பன் ஈல்மீன்:-** பார்ப்பதற்கு ரிப்பன் போன்ற தோற்றமளிக்கும். ரிப்பன் மீன்கள் ஈல் வகையைச்சேர்ந்தவையாகும். இவற்றின் நீண்ட மெல்லியவாயைக் கொண்டே இரையை உடும்புப்பிடியாக பிடித்து விழுங்கி விடும். அண்மையில் திருகோணமலைக் கடற்பரப்பில் அதிசய ஒளி தெரிந் தமைக்கும் இவ்வாறான கடல்வாழ் உயிரினங்கள் காரணமாக இருக்கலாமா? இது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது. (ற)

# இனிய இசை கேட்டால்... இதய நோய் ஆறும்

இதய நோயால் அவதியா? அமைதியான சூழலில் இந்திய பாரம்பரிய கர்நாடக இசையைக் கேளுங்க, பிரச்சினை குறைந்து விடும் என்கிறது இங்கிலாந்து ஆய்வு முடிவு. இங்கிலாந்தின் ஓகஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் இத்தாலியின் பாபியா பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த இதய நலத்துறை விஞ்ஞானிகள் கூட்டு ஆராய்ச்சியில் இறங்கினர். குறிப்பாக இதய நோய்க்கும் இசைக்கும் உள்ள தொடர்பு பற்றி விரிவான ஆய்வு செய்தனர். அதன் முடிவுகள் ஹார்ட் என்ற மருத்துவ இதழில் சமீபத்தில் வெளியானது.

இதயம் தொடர்பான பாதிப்புகளில் சிக்கியவர்கள் கேட்கும் மற்ற இசை நிகழ்ச்சிகளுடன் இந்திய பாரம்பரிய கர்நாடக இசையை ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. இதய நோயாளிகள் சிலரிடம் மேலை நாட்டு இசை மற்றும் கர்நாடக இசையை குறிப்பிட்ட காலத்துக்கு தொடர்ந்து கேட்டுவர அறிவுத்தப் பட்டது.

வேகமான, கூச்சல் மற்றும் இரைச்சலான குரலுடன் கூடிய இசையை கேட்கும்போது இதய



நோய் பாதிப்பு சிறிது அதிகரிப்பதும், கர்நாடக இசையை அமைதியான சூழலில் ஆழ்ந்து ரசிப்பதால் இதயத்துக்கு இதம் ஏற்படுவதும் நோயாளிகளிடம் நடத்திய சோதனையில் தெரியவந்தது. அற்புத ராகங்களை இசையாகக் கேட்பதால் இதயம் தொடர்பான பிரச்சினைகள் குறைவது உறுதியானது என்று அந்த மருத்துவ இதழில் கூறப்பட்டுள்ளது. (ற)

# சோமவன்ஸவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குக!

## முன்னாள் இராணுவ அதிகாரிகள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

இராணுவத்தைக் கலைக்க வேண்டும் எனக் கூறிய ஜே.வி.பியின் தலைவர் சேமவன்ஸ அமரசிங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இராணுவத்தின் முன்னாள் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சோமவன்ஸ அமரசிங்கவின் கூற்று முழு இராணுவத்தினரையும் அவமானப்படுத்துவதாகவும் அது நாட்டை நேசிக்கும் இராணுவ வீரர்களின் சுய கௌரவத்தைப்



பாதிப்பதாகவும் உள்ளதாகத் தெரிவித்திருக்கும் அவர்கள் இதனை சிறு விடயமாகக் கருதாது உடனடியாக அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, முன்னாள் இராணுவத் தளபதி எயார்வைஸ் மார்டில் ஹரி குணதிலக்க, முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் டெனிஸ் பெரேரா, முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சிறில் ரணதுங்க ஆகியோர் சந்திரிகாவிடம் எழுத்துமூலம் இவ் வேண்டுகோளை முன்வைத்துள்ளனர். (ற)

# எஸ்.பியை விரைவில் விடுவிக்க ஜனாதிபதி தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முககியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்வது தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரான்ஸிலிருந்து நாடு திரும்பிய ஜனாதிபதி சந்திரிகா ஐக்கிய தேசியக் கட்சியுடன் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடனேயே இந் நடவடிக்கையை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்வதற்குரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியின் கையெழுத்திற்காக தயார் நிலையில் இருப்பதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன. எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்வதனால், ஐக்கிய தேசியக கட்சியின் ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளில் அவர் ஈடுபடுவார். அதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்பதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் சந்திரிகாவின் இந் நடவடிக்கையால் அதிருப்தியடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷவுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக மஹிந்தவை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கும் நோக்கிலேயே ஜனாதிபதி இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற)

# பாகிஸ்தானை நேற்று மீண்டும் உலுக்கியது பூகம்பம்!

# உயிரிழப்பு 26,500 ஆக உயர்வு!!

* பாகிஸ்தான்-18,500
* ஆப்கான் -5,000
* இந்தியா -3,000

பேர் பலி

* மேலும் பூகம்பம் ஏற்படலாமென எச்சரிக்கை!
* சுமார் 65,000 பேர் காயம்
* போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணி
* சிற்சில இடங்களில் அவசரகால நிலை பிரகடனம்

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானை மையமாகக்கொண்டு பாகிஸ்தானின் வடபகுதியையும் வட இந்திய மாநிலங்களையும் நேற்று தொடர்ந்தும் உலுக்கிய பூகம்பத்தினால் உயிரிழந்தோர் தொகை சுமார் 26 ஆயிரத்து 500ஐ தாண்டியுள்ளதாக அங்கிருந்து இறுதியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. இடிபாடுகளிலிருந்து மரண ஓலம் கேட்டவாறு உள்ளதாகத் தெரியவருகின்றது.**

நேற்று முன்தினம் தெற்காசிய நாடுகளை உலுக்கிய நிலநடுக்கம் நேற்று இரண்டாம் நாளாகவும் அந்நாடுகளை உலுக்கி பாரதூரமான உயிரிழப்புக்களையும் பாரிய சொத்தழிவுகளையும் ஏற்படுத்




தியுள்ளது.

பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தினால் சுமார் 18ஆயிரத்து 500 பேர் பலியாகியுள்ளதாகத் தெரியவருகிறது. இந்தியாவின் வட மாநிலங்களையும் ஆப்கானிஸ் தானையும் கடந்த இரு நாட்களாக உலுக்கிய நிலநடுக்கத்தினால் சுமார் 8ஆயிரம் பேர் பலியாகியுள்ளதாக அறியப்படும் அதேவேளை சுமார் 65ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இடிபாடுகளுக்குள் ஏராளமானோர் சிக்கியுள்ளனர். இடிபாடுகளைத் தோண்டத் தோண்ட பிணக்குவியல்கள் காணப்படுவதாகவும், படுகாயமடைந்தோர் இடிபாடுகளிலிருந்து தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு வருவதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

தெற்காசிய நாடுகளில் கடும் நிலநடுக்



கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து தெற்காசியக் கடற்பிராந்தியத்தில் சில இடங்களில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் சுனாமி பீதியில் மக்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

அந்தந்த நாட்டு இராணுவத்தினரும் பொலிஸாரும் விசேட மீட்புப் படையணியினரும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தபட் டுள்ளனர். போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளபட்டு வருகின்றன. சிற்சில இடங்களில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

### பாக்.இல் நேற்று மீண்டும் பூகம்பம்

அதிர்ச்சியிலிருந்து மீளாத பாகிஸ்தானை நேற்று அதிகாலை மீண்டும் மையமாகக் கொண்டு தாக்கிய நிலநடுக்கத்தின் கோரத் தாண்டவம் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இஸ்லாமாபாத்துக்கும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள முசாபராபாத நகருக்கும் இடையே மையம் கொண்டு தாக்கிய இந்த பூகம்பம் ரிக்டர் அளவில் 7.6ஆக பதிவாகியது.

பூகம்பத்தின் தாக்கம் இந்தியாவின் வட மாநிலங்களையும், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானையும் உலுக்கி எடுத்து விட்டது. இதில் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பில் உள்ள முசாபராபாத் நகரம் மற்றும் இந்தியாவில் ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஆகியன மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகி பல்லாயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளனர்.



பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இறந்தவர்கள் எண்ணிக்கை 2 ஆயிரத்தை தாண்டிவிட்டது. முசாபராபாத் நகரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரில் பள்ளிக் கட்டடங்கள் இடிந்து தரைமட்டமானதில் 400பள்ளிக் குழந்தைகள் இறந்தனர். 200இராணுவ வீரர்களும் பலியாகியுள்ளனர்.

பூகம்பத்தில் முசாபராபாத் நகரம் பாதி அழிந்துவிட்டது. இதில் பெரும்பாலான பள்ளிக் கட்டடங்களும் குடியிருப்புகளும் இடிந்து தரைமட்டமாகிவிட்டன. இடிபாடுகளில் இருந்து மரண ஓலம் கேட்டவண்ணம் உள்ளது.

இடிபாடுகளைத் தோண்டத் தோண்ட பிணக்குவியல்களாகக் காணப்படுகின்றன. பாகிஸ்தானில் பூகம்பத்துக்கு பலியானவர்கள் எண்ணிக்கை 19ஆயிரத்தைத் தாண்டும் என்று மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் செளகத் சுல்தான் தெரிவித்துள்ளார்.



பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அதிபர் முஷாரப் ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், பாகிஸ்தான் அதிபருடன் டெலிபோனில் தொடர்புகொண்டு பேசினார். பாகிஸ்தானுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத்தயாராக இருப்பதாக அவரிடம் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட இதியா-பாகிஸ்தானுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார். உயிர் இழந்தவர்களது குடும்பத்துக்கு அமெரிக்க மக்கள் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாகவும் அவர் கூறி



யுள்ளார்.

நேற்று முன்தினம் உலுக்கிய பூகம்ப அதிர்ச்சியில் இருந்து மக்கள் மீளாத நிலையில் நேற்று மீண்டும் பாகிஸ்தானை பூகம்பம தாக்கியுள்ளது. இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 2.43 மணிக்கு பூகம்பம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6ஆக பதிவாகி இருந்தது.

ஏங்கனவே நேற்று முன்தினம் பூகம்பம் தாக்கியதும் அடுத்தடுத்து சிறிய அளவிலான நில அதிர்வுகள் ஏற்பட்டன. மிகப் பெரிய பூகம்பம் தாக்கியதும் தொடர்ச்சியாக லேசான அதிர்வுகள் ஏற்படுவது உண்டு. அதன்படி நேற்றுமுன்தினம் காலை 9.05மணிக்கு பூகம்பம் தாக்கிய பின்பு அடுத்தடுத்து 40 முறை லேசான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

முதலாவது பூகம்பம் இந்திய நேரப்படி காலை 9.22 மணிக்கு பாகிஸ்தானை தாக்கியது. அதன் பிறகு ஏற்பட்ட லேசான நில அதிர்வுகளுக்கு பின்பு மாலை 4.10 மணிக்கு மீண்டும் பலமான பூகம்பம் தாக்கியது. இது ரிக்டர் அளவில் 6.5ஆக பதிவானது.



அதன் பிறகு நேற்று அதிகாலை 2.43 மணிக்கு மீண்டும் 6 ரிக்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டு பாகிஸ்தானை மீண்டும் குலுக்கியது. இதனால் மக்கள் அதிகாலையில் வீடுகளை விட்டு வெளியேறினார்கள். இரவு முழுவதும் குளிரில் நடுங்கியவாறு வீதியில் பொழுதைக்கழித்தார்கள்.

நேற்றுக்காலை பாகிஸ்தானில் ஏற்பட்ட புமி அதிர்ச்சி குஜராத் மாநிலத்திலும் உணரப்பட்டது. அதிகாலை 2.18மணிக்கு குஜராத்தின் கட்ஜ் பகுதியில் பூமி அதர்ச்சி ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 6.0ஆக பதிவாகியது. அடுத்தடுத்து ஏற்பட்டு வரும் நில அதிர்வுகளால் மக்கள் பீதி அடைந்துள்ளனா.

### காஷ்மீரில் பூமியதிர்ச்சி

காஷ்மீரில் யூரி நகரம் தான் பூமி அதிர்ச்சியின் கடுமையான தாக்குதலை சந்தித்தது. பூமி அதிர்ச்சியில் அங்கு இருந்த பயணிகள் மருத்துவமனை, பொலிஸ் நிலையம், ரேஷன் கடைகள் எதுவுமே தப்பவில்லை. அனைத்தும் இடிந்து தரைமட்டமாகிவிட்டன. யூரி நகரத்தை மக்கள் காலி செய்துவிட்டனர்.

ஜாப்லா, கமல், கோட்டா போன்ற பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் பேர் கட்டடங்கள், வீடுகள் இடிந்ததில் இறந்துவிட்டனர்.

யூரி நகரில் பூமி அதிர்ச்சியால் தீப்பிடித்து மிச்சம் மீதி இருந்த கடைகளும் எரிந்து சாம்பலாகின. இது ரம்ழான் தொழுகை காலம் என்பதால் தொழுகையை முடிதத வர்களுக்கு உண்ண உணவுகிடைக்கவில்லை.

யூரி நகரில் படுகாயம் அடைந்த 300





பேர் ஹெலிகாப்டர்கள் மூலம் ஸ்ரீநகர் கொண்டுசெல்லப்பட்டனர். யூரியில் உள்ள இராணுவ மருத்துவமனை 90சதவீதம் அழிந்துவிட்டது. தீவிரவாதிகள் ஊடுருவாமல் இருக்க எல்லைக் கட்டுப்பாடு கோடு வழியாகப் போடப்பட்ட முள்வேலி நாசம்



அடைந்தது. சலாமாபாத் நகரம் அடியோடு சிதைந்து விட்டதால் அந்த நகர மக்கள் பாதுகாப்புக்காக வேறு இடம்தேடி செல்கினறனர். இறந்தவர்களின் உடலை விட்டு செல்ல முடியாத உறவினர்கள் அங்கேயே தங்கியுள்ளனர்.

பூகம்பத்தில் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி தான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தலைநகர் முஷாபராபாத் பெரிதும பாதிக்கப்பட்டுள்ளது. பாலகோட் டிவிஷன் பகுதியில் 3 கிராமங்கள் அடியோடு புதைந்து விட்டமை தெரியவருகின்றது.

கனரக பளுதூக்கும் மோட்டார் வாகனங்கள் இடர்பாடுகளை அகற்றும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. பூகம்பத்தால் பாகிஸ்தானின் பல பகுதிகளில் நிலச்சரிவு



ஏற்பட்டிருப்பதால் சாலைகளில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. மக்கள் பயந்துகொண்டு வீடுகளை காலி செய்துவிட்டு திறந்த வெளிகளில் தங்கியுள்ளனர். பாகிஸ்தானில் பெரிய நகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் அண்டை நாடான ஆப்கானிஸ்தானையும் பூகம்பம் குலுக்கியது. அங்கு 5ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தானில் அடுத்த சில நாட்களில் மேலும் பல தடவைகள் பூகம்பம் ஏற்படலாம் என்று பூகம்ப ஆராய்ச்சி மைய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். 120 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தானில் மிகப் பெரிய அளவில் பூகம்பம் நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களில் ஏற்படும் பூகம்பமானது ரிக்டரில் 5முதல் 6வரை இருக்கலாம் என்று பூகம்ப ஆராய்ச்சித்துறை டைரக்டர் ஜெனரல் ஓமர் எல்-ஜமான் செளத்திரி கூறியுள்ளார். (ஐ)

# ஐ.தே.கவுக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் பிரசாரம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விற்கு ஆதரவு திரட்டும் வகையில் கிழக்கில் பல கூட்டங்களை ஏற்பாடு செய்யவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

கிழக்கில் வாழும் மக்கள் எப்போதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பக்கமே உள்ளார்கள். இந்நாட்டு தேர்தல் வரலாற்றில் தாங்கள் ஆதரவளித்த அனைத்து வேட்பாளர்களும் வெற்றி பெற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களை ஒன்று திரட்டி ரணில் விக்கிரமசிங்க வின் வெற்றியினை உறுதிப்படுத்துவதற்காக இக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் இதில் சில கூட்டங்களில் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்வார் என்றும் ஹக்கீம் தெரிவித்தார். (ச-4)

# திருவாதிரை உற்சவம் ஜனவரிமாதம் 4ஆம் திகதி

(காரைநகர்)

இவ்வருட திருவாதிரை உற்சவம் தொடர்பான சர்ச்சைக்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலய நிர்வாகம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இவ்வருடம் மார்கழி மாதத்தில் இரு திருவாதிரை பட்சம் காணப்பட்டதால் எதனைக் கைக்கொள்வது என இந்துக்களிடையே பெரும் சர்ச்சை நிலவியது.

இது தொடர்பாக காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தாக்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் எதிர்வரும் தைமாதம் 4ஆம் திகதியே திருவாதிரை உற்சவம் ஆரம்பித்து தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ஆதலால் இறுதியாக வரும் பட்சத்தையே கைக்கொள்ளுமாறும் இது தொடர்பாக ஈழத்து பிரபல ஆலயங்கள் அனைத்தும் தம்முடன் தொடர்பு கொண்டவண்ணமுள்ளதாகவும் அவர்களுக்கும் மேல் கூறியவற்றையே தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். (த-246)

# பல்கலை மாணவருக்கு பண உதவி

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தினால், பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்படும் வறிய மாணவர்களிற்கு பண உதவி வழங்கப்படவுள்ளதாக கற்பக விநாயகர் ஆலய நிர்வாகி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் சித்திரை மாதம் தொடக்கம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட வறிய மாணவர்கள் இலங்கையில் எப்பாகத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டாலும் இதற்கு விண்ணப்பிக்க முடியும். சமயப்பணியுடன் சமூக அறப்பணியையும் விரிவுபடுத்தும் இத்திட்டத்திற்கு தகுதியானவர்கள் ஆலய நிர்வாகத்துடன் நேடிரயாக தொடர்புகொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (த-246)

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நடாத்திய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் தர உள்ளீட்டு உருவாக்கல் போட்டியில் பரிசில் பெறுவோரின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் கற்றல், கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையம் யாழ். மாவட்டத்திலுள்ள ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிடையே நடாத்திய கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டியில் அதிவிஷேடம், விஷேடம், சாதாரணம் ஆகிய தரங்களில் சித்தியடைந்தவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையில் ஆரம்பக் கல்வி ஆசிரியரின் வாண்மைத்துவத்தை வளர்த்து, கற்றல் கற்பித்தலில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தப் போட்டி நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் பரிசில் பெறும் ஆசிரியர்களது பெயர் விபரம் வருமாறு:-

## முதன்மை நிலை 01

### அதிவிசேடம்

திருமதி.சூ.துரைசிங்கம்-(கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்), திருமதி இ.நவரத்தினராசா -(கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), திருமதி தி.டொனா அல்பிறட் -(ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

### விசேடம்

திருமதி சி.ஞானசேகரம் -(ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), திருமதி இ.வேணுகாந்தன் -(இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), திருமதி மா.மகேந்திரன் -(சிறுப்பிட்டி இந்து த.க.பாடசாலை), தி.சுகுமாரன் -(இணுவில் இந்துக்கல்லூரி), வே.அன்பழகன் -(இந்து ஆரம்பப் பாடசாலை).

### சாதாரணம்

திருமதி. மேரிபெனிக்னாபிலிப்-(ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), தி.சுகுமாரன் -(இணுவில் இந்துக் கல்லூரி), திருமதி உ.திருச்சபேசன் -(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), திருமதி த.சாரதா-(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), திருமதி இ.இராஜேஸ்வரன் -(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), திருமதி கு.விஜிதா-(தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம), இராஜசேகரம்-(கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்), திருமதி.ஜெ.சிவநடராஜா -(கரணவாய் தாமோதர வித்தியாலயம்), தெ.புவனேந்திரன்-(கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்), த.சுகந்தினி-(நாரந்தனை றோ.க.வித்தியாலயம்).

## முதன்மை நிலை 02

### அதிவிசேடம்

ஞா.அன்ரன் பிறேமதாஸ்-(உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்), திருமதி பா.பொல்கமல்ராஜ்-(உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்), திருமதி ந.த.தயாளஜெயன் -(கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

### விசேடம்

திருமதி அ.சந்திரசேகரம்-(கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), கு.திலகவதி -இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), மைதிலி மார்க்கண்டு -(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), திருமதி ம.உதயகுமார் -(இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), திருமதி. நட.தயாளஜெயன் -(கந்தரோடை தமிழ்க் கலவன் வித்தி.).

### சாதாரணம்

மஞ்சுளா நாகராஜா -(ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மயூரதி லோகேஸ்வரன் -(பன்னாலை சேர்.கனகசபை அ.த.க.பாடசாலை), திருமதி பு.மனோகரன்-(உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்), திருமதி ரி.ரி.அன்ரன் கிறேசியன் -(சுன்னாகம் றோ.க.த.பாடசாலை), திருமதி வ.பாலச்சந்திரன் -(கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), செ.கபரியேல் பிள்ளை -(உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை), இ.சுபாசினி -(கட்டுடை சைவ.வித்தியாலயம்), திருமதி ச.சிவலிங்கம் -(உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை), மயூரதி லோகேஸ்வரன் -(பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை), திருமதி த.சுப்பிரமணியம்- (தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்).

## முதன்மை நிலை 03

### அதிவிசேடம்

திருமதி இ.லோகேஸ்வரன் -(கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), திருமதி ம.உதயராசா-(கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), ம.மீனலோசனி-(உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலை).

### விசேடம்

யாழினி அருளானந்தம் -(திருக்குடும்ப கன்னியர்மடம்), வே.அன்பழகன் -(இந்து ஆரம்பப் பாடசாலை), அன்ரனி புறூனோ -(இந்து ஆரம்பப் பாடசாலை), யசோதா பிரேம்குமார்-திருக்குடும்ப கன்னியர்மடம), த.யோகராஜா -(கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்), அ.டோறாபான்சி -(புதுமடம் றோ.க.த.க.பாடசாலை.

### சாதாரணம்

திருமதி ந.கேதீஸ்வரன் -(கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்), திருமதி வ.அருட்செல்வன் -(உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), திருமதி பா.போல்கமல்ராஜ் -(உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்), திருமதி தெ.கொலின் -(பாஷையூர் சென்.அன்ரனிஸ் றோ.க.த.க.வித்தியாலயம்), க.சுபாலினி -(நாரந்தனை றோ.க.ம.வித்தியாலயம்), திருமதி நி.நந்தினி -(நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), திருமதி ந.கேதீஸ்வரன் - (கோண்டாவில் இராமகிருஷ்ணா ம.வித்தியாலயம்), திருமதி பூ.வரதராசா -அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை, யாழினி அருளானந்தம் -(திருக் குடும்ப கன்னியர்மடம்), அ.டோறாபான்சி -(புதுமடம் றோ.க.த.க.பாடசாலை).

## கணனிப் பிரிவு

### அதிவிசேடம்

திரு ர.யசோதரன்-(உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை), திருமதி உ.சிவபுத்திரன் -(யாழ். மத்திய கல்லூரி), திருமதி சி.கணேசநாதன் -(யாழ். மத்திய கல்லூரி).

### விசேடம்

த.பிரியலஷ்மி -(யாழ். மத்திய கல்லூரி), க.சுமதி -(யாழ். மத்திய கல்லூரி), யோ.மடோனா -(யாழ். மத்திய கல்லூரி), யோ.ஜெறுசியா -(யாழ். மத்திய கல்லூரி).

இப்போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா இன்று மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில், பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்த மூர்த்தியும், சிறப்பு விருந்தினராக, யாழ்.இலங்கை வங்கி, 2ஆம் கிளை முகாமையாளர் கே.சிவராமலிங்கம் மற்றும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் தேசிய கல்வியியற் கல்லூரி மேலதிக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் வாழ்த்துரை வழங்குவார். உரைகளைத் தொடர்ந்து 'படி-ஆசிரியர் வாண்மை' இதழ் வெளியிட்டு வைக்கப்படும். வெளியீட்டுரையை கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி வா.தனபாலன் நிகழ்த்தவுள்ளார். (ற)

# இராசிபலன்

10.10.2005

(புரட்டாதி 24, திங்கட்கிழமை)

சப்தமி முற்பகல் 11.27 மணிவரை

பூராடம் பின்னிரவு 4.23 மணிவரை

இராகுகாலம் 7.32-9.02 மணிவரை

சுபநேரம் 12.02-1.32 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | ஆன்றோர் மதிப்பு, முயற்சி தாமதம், உடல் உழைப்பு, வீண்பயம். |
| இடபம் | எதிர்பாரத அச்சம், போசன சுகக் குறைவு, முயற்சி தடங்கல், உடல்நலக்குறைவு. |
| மிதுனம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பணவருவாய், காரிய அனுகூலம். |
| கடகம் | பணவருவாய், திடீர் பயணம், சுகவாழ்வு, காரிய சித்தி. |
| சிங்கம் | வியாபார நன்மை, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், வேலைச்சுமை. |
| கன்னி | கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், காரிய தாமதம், ரோகபயம். |
| துலாம் | இனிய அனுபவம், அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, பணவருவாய். |
| விருச்சிகம் | மதிப்புக்குறைவு, பணவிரயம், எடுத்த காரியம் தாமதமாகும், திடீர்நன்மை. |
| தனுசு | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, நிலை மாற்றம், புதிய பொருள் சேர்க்கை. |
| மகரம் | பிதாசிந்தை, மனக்கிலேசம், சுப செலவு, சயன சுகக்குறைவு. |
| கும்பம் | தொழில்சிந்தை, பெருமையடைதல், குடும்ப சுகம், போசன சுகம். |
| மீனம் | அதிகாரம், போசன சுகம், முயற்சிகை கூடும், சுபநிகழ்வு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# கூடைப்பந்து சுற்றுப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் யாழ்.மாவட்ட ரீதியாக ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் அணியினர் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் இணைப்பாளர்- அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்ப முடிவுதினம் எதிர்வரும் 12ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மனிதநேய அன்பளிப்பும் கருத்துப் பரிமாற்றமும்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு தெய்வக்குழந்தைகள் இல்லத்தினால் இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு புங்குடுதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் முன்பள்ளிக் குழந்தைகளுக்கான மனிதநேய அன்பளிப்பும், சுயசார்பு நிலைக்கான கருத்துப் பரிமாற்றமும் நடாத்தப்படவுள்ளது.

புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வேலணை பிரதேசசபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம், ஓய்வுபெற்ற தீவக வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.தவராசா, ஓய்வுபெற்ற ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கலாநிதி பிரகதீஸ்வரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகிழக்கு செயலாளர் இ.மயில்வாகனம், மழலைக் கவிதைகள் நூல் வெளியீட்டாளர் தா.நாகலிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (த-126)

# பொலிஸ்மா அதிபர் ஆராய்வு

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகள் மேற்கொள்ளும் பணிகளின் முன்னேற்றம் குறித்து பொலிஸ்மா அதிபர் ஆராயவுள்ளார்.

இப்பணிகளில் ஈடுபட்டுள்ள சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஒளிவு மறைவின்றி கடமைகளை ஆற்றவேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தப் பணிப்புரையை மீறும் அதிகாரிகள் கடமையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை இரண்டு தினங்களுக்குள் விசாரணைசெய்து முடிக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

குற்றம் புரிபவர் எத்தகைய தரத்திலிருந்தாலும் அவரை நீதியின் முன்நிறுத்தத் தயங்கக் கூடாது என்றும் பொலிஸ்மா அதிபர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். (ற-7)

# உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கு கொழும்பில் பொதுப் பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து 1996, 1997, 1998,1999, 2000ஆண்டுகளில் வெளியேறிய உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா, தேசிய ஆங்கில டிப்ளோமா, தேசிய வணிக டிப்ளோமா மற்றும் தேசிய வியாபார கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

இப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்பவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கினை யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. பட்டச் சான்றிதழ் பெற தகுதியுள்ள சகல மாணவர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் ஒன்றுகூடி தங்களது வரவினை தவறாது உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர் சங்க செயலாளர் வி.தயாபரன் கேட்டுள்ளார். (ச)

எந்தக் காலத்திலும் புயற்காற்றினாலும், பூமி அதிர்ச்சியினாலும் அழிந்தவற்றைவிட வீடுகளும் நகரங்களும் மனிதர்கள் கைகளினாலேயே அதிகமாக நாசமடைந்திருக்கின்றன. - ஆவ்பரி

வலம்புரி

## இயற்கையின் சீற்றம் எதற்காக?...

இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் ஒரு கணப்பொழுதில் பலியாகிப்போயின.

2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமிப்பேரலைக்கு ஆயிரக் கணக்கான மனிதர்களை பறிகொடுத்து அந்தச் சோகத்தில் இருந்து இன்னமும் மீளமுடியாத நிலையில் இயற்கை தனது சீற்றத்தை மீண்டுமோர் தடவை வெளிப்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இந்தியாவின் காஷ்மீர் எல்லைப்புறத்திலும் பாகிஸ்தான், ஆப்கானிஸ் தானிலும் நடந்த நிலநடுக்கம் ஒரு கணப் பொழுதில் பல்லாயிரக்கணக்கான உயிர் களைக் காவு கொண்டமை உலகம் முழு வதையும் உலுக்கியுள்ளது.

குறிப்பாக பாகிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக் கத்தால் ஆயிரக்கணக்கானோர் பலியாகியமை துன்பகரமான செய்தியாகும்.

ஒரு கணப்பொழுதில் நடந்த நிலநடுக்கம் வானுயர்ந்த கட்டடங்களை மண்மீது சரித்து விட்டது. இயற்கைக்கு ஏன் இந்த சீற்றம்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதை மனித இனம் மறந்து விட்டது என்பதாலா? நீதி, தர்மம், நேர்மை, ஒழுக்கம் என்ற வாழ்வியல் பண்பாடுகளை சிதைத்துவிட்டு மனித குலம் தாம் நினைத்த பாட்டில் வாழ முற்பட்டதாலா? உள்ளத்தால் எழும் கேள்விகளுக்கு விடை காண்பது மனிதத்தின் கடமையாகின்றது.

நிலநடுக்கத்திற்கான காரணங்களும், ஆழிப்பேரலைகளுக்கான வியாக்கியானங் களும் விஞ்ஞான உலகில் கூறப்படுகின்றனவே தவிர, இயற்கையின் சீற்றத்தைத் தடுப்பது எங்ஙனம் என்பது பற்றி உச்சம் பெற்றுள்ள விஞ்ஞான உலகால் கண்டறிய முடியவில்லை என்பதே உண்மை.

ஆக, உலகம் தன்னலம் கருதியசெயற் பாட்டில் இறை நம்பிக்கையை இழந்து விட்டது. அழகான இந்தப் பூமியை இறைவன் நமக்கு தந்துள்ளான். இது அனைத்து மனித குலத் திற்கும் பொதுவானது. நிறத்தால் ,இனத் தால், மதத்தால் , மொழியால் உயர்ந்தவர் என்ற பேதமை மனிதனை மனிதன் அடக்கும் அநாகரிகமான செயலை தோற்றுவித்தது. இதுவே அழிவின் மூலமாயிற்று.

உலகில் உள்ள எல்லா மனிதர்களும் எல் லாம் பெற்று வாழவேண்டுமென்ற 'இறை நீதி' வையகம் முழுவதிலும் என்று உணரப்படு கின்றதோ என்று நடைமுறைக்கு வருகின் றதோ அன்று தான் இயற்கை தன் சீற்றத் தைத் தணித்துக்கொள்ளுமோ என எண் ணத் தோன்றுகின்றது.

பொறுமையின் உச்சத்தை உணர்த்த 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்' என்று கூறிப் பெருமைப்பட்ட நிலையில் அந்த நிலமே உலுப்புகிறது எனில், என்ன பிழைசெய்தோம் இறைவா! என்று அவனிடம் கையேந்தி வேண்டுவது மானிடம் தன்னைப் புடம்போடு வதற்கான மிகச்சிறந்த வழியாக இருக்கும்.

# இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்பட சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும்

## பிரச்சினைகளைத் தீர்க்க இதுவே வழியென்கிறார் ரணில்

(கண்டி)



நாடு எதிர்நோக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரண்டு முக்கிய அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும். இதனை சர்வதேச சமூகம வலியுறுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில வக்கிரமசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

இரண்டு முக்கிய அரசியல் கட்சிகளும் பிரிந்திருப்பதன் மூலம் பிரசசினைகளுக்குத் தீர்வு காண முடியாது எனவும் நேற்று முன்தினம் கண்டி மல்வத்தையின் பிரதம குருவை சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பிரதமகுருவின் கவனத்திற்குக் கொண்டு வந்ததாகக் குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க இது சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் தாம் பேச்சுவார்ததை நடாத்துவதாக பிரதமகுரு உறுதியளித்ததாகவும் குறிப்பிட்டார்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியினைக் கைப்பற்றும் பட்சத்தில் இரண்டு பிரதான கட்சிகளிலுமிருந்து முக்கியஸ்தர்களை அமைச்சரவையில் நியமிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உருவாக்கப்படும்.

நான் அரசாங்கத்தினை அமைக்கும் பட்சத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அழைத்து வடக்கு-கிழக்குப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினைக் காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் அதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் அழைத்து இந்நடவடிக்கைகளில் அவரது ஆதரவையும் ஒத்துழைப்பினையும் பெறுவேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ந-4)

# தேர்தல் நடவடிக்கைகளிலிருந்து சிறிபதியை நீக்குமாறு கோரிக்கை

## ஸ்ரீ.சு.க. அமைச்சர்கள் மஹிந்தவிடம் முன்வைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலிருந்து பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராய்சசியை நீக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் ஆதரவினை பெற்றுக்கொள்ள முடியாமல் போனமைக்கு சிறிபதி சூரியாராய்சசி கூறியிருந்த கருத்துகளே காரணம் என்றும் அவர்கள் மஹிந்தவிடம் சுட்டிக்காடடியுளளனர்.

ஆறுமுகம் தொண்டமானும் ரவூப்ஹக்கீமும் ஆதரவு வழங்காவிடினும் மஹிந்தவால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியும் என மஹிந்த தலைமை தாங்கிய கூட்டத்தில் சூரியாராய்ச்சி தெரிவித்திருந்தர்.

மஹிந்தவுக்கு ஆறுமுகன் தொண்டமான் ஆதரவளிக்கக்கூடிய நெகிழ்வுத்தன்மையுடன் இருந்த நேரத்தில் பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராயச்சி இப்படியான கருத்தை வெளியிட்டதால் தொண்டமான் தனது ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கத் தீர்மானித்ததாகவும் அவ்வமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்விடயம் பற்றி அறிந்த அமைச்சர் மங்கள சமரவீர பிரதியமைச்சர், சிறிபதி சூரியாராய்ச்சி மீது தனது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன் இது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமானிடம் மன்னிப்பும் கேட்டுளளார்.

சூரியாராயச்சிக்கு போதிய அரசியல் அனுபவம் இல்லை என்றும் அவர் கூறுவதனை பொருட்படுத்தவேண்டாம் என்றும் தொண்டமானை அமைச்சர் மங்கள சமரவீர கேட்டுள்ளார்.

எனினும், பிரதமரின் முன்னிலையில் தங்களை ஒருவர் விமர்சிக்கும் போது தங்களின் ஆதரவை அவருக்கு வழங்க முடியாது என்று ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

ஆறுமுகன் தொண்டமானின் நிலைப்பாட்டை அமைச்சர் மங்கள சமரவீர பிரதமருக்குத் தெரியப்படுத்திய போது சிறிபதியை தனது தேர்தல் வேலைகளில் புகுத்திய மங்கள சமரவீரவின் மீது கோபத்தைக் காண்பித்துள்ளார்.

இசசம்பவத்தை அடுத்து பிரதமரைச் சந்தித்த சில அமைசசர்கள் தேர்தல் நடவடிக்கைகளிலிருந்து சிறிபதியை ஓரங் கட்டுமாறு மஹிந்தவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. (ந-4)

# இ.தொ.கா மற்றும் ம.ம.மு என்பன ரணிலின் வெற்றிக்காக உழைக்கும்

## கட்சித் தலைவர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஆதரவை பெற்றுள்ளதால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, இம்முறை மலையகத்தின் 12இலட்சம் வாக்குகளை பெறக்கூடும் என்று அக்கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய வம்சாவழி மக்கள் அதிகமாக வாழும் மலையகத்தில் இவ்விரு கட்சிகளுமே பிரதான கட்சிகளாகவுள்ளன. நுவரெலியா, பதுளை,கண்டி,மாத்தளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களின் வெற்றிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ"ம் மலையக மக்கள் முன்னணியும் முக்கிய காரணிகளாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



ரணில்விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக மலையகம் முழுவதையும் உள்ளடக்கியவிதத்தில் பெரும் பிரசாரஙகளை முனனெடுப்பதற்கு இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ"ம் மலையக மககள் முன்னணியும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அக் கட்சிகளின் தலைவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ந-4)

# புங்குடுதீவு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமனம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமனம் செய்யப்படவுள்ளார்.

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிரந்தர வைத்தியர் இன்றி இயங்கி வந்தது. இந்நிலையில் அரசு-புலிகளுக்கு இடையிலான புரிநதுணர்வு ஒப்பநதத்தையடுத்து அப்பகுதி மக்களுக்கான வைத்திய சேவையினை புங்குடுதீவு தியாகதீபம் திலீபன் மருத்துவமனை வழங்கி வந்தது.

விடுதலைப் புலிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியை விட்டு அண்மையில் வெளியேறியதையிட்டு திலீபன் மருத்துவமனையும் மூடப்பட்ட நிலையில் இப்பிரதேச மக்கள் வைத்திய சேவையின்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இநநிலையில் புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எதிர்வரும் 15ஆம் திகதி மாவட்ட சுகாதார திணைக்களத்தால் வைத்திய கலாநிதி எஸ்.மரியதாஸ் என்பவர் நிரந்தர வைத்தியராக நியமிக்கப்படவுள்ளார். இவருக்கு மாதாந்த வேதனத்தினை விட புங்குடுதீவு வாழ் சுவிஸ் ஒன்றியத்தினரால் மேலதிகமாக 10ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-126)

# 2ஆம் லெப்.மாலதியின் நினைவுதின நிகழ்வு

(தனங்கிளப்பு)

முதலாவது பெண்போராளி 2ஆம் லெப். மாலதியின் 18ஆம் ஆணடு நினைவுதின நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கோப்பாயில் உள்ள மாவீரர் மாலதியின் நினைவுத்தூபி முன்றலில் சமூக அபிவிருத்தி மன்றத்தின் யாழ். மாவட்ட தலைவி திருமதி நவநீதம் ஜெகநீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுரைகளை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதம்பரநாதன் செ.கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனா. (த-37)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

சிந்தனை செய்து செயல்படும் போது அதன் விளைவுகள் பாராட்டுதற்குரியனவாக இருக்கும். சிந்தனா சக்தி இருந்தாலும் செயல்படும் முறைகள் வகுக்கப்பட்டு இருந்தால் அவை மேலும் வலிமையுடன் பிரகாசிக்கின்றன.

சுவாமி விவேகானந்தர்



பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தின் பின்னரான காட்சிகள்

# இலங்கையில் சுழல்காற்று வீசும் அபாயநிலை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் தினங்களில் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் சுழல் காற்று வீசக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையினை கருத்திற்கொண்டு அவதானமாக இருக்க வேண்டுமென வளிமண்டலத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சி.எச்.தர்மரத்ன பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளளார்.

சுழல்காற்றுக் காரணமாக நாட்டின் சில பகுதிகளில் அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் எப்பகுதியில் இக்காற்று வீசும் என்பது குறித்து கண்டறியவில்லை என அவர் தெரிவித்தார்.

(ச-4)

# மோசமாகத் தாக்கப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவர் பற்றைக்குள் இருந்து மீட்பு

## பருத்தித்துறை தம்பசிட்டியில் சம்பவம்

(துன்னாலை)

பருத்தித்துறை தம்பசிட்டி மயக்கை விறுமர் கோயிலுக்கு முன்னால் உள்ள பற்றைக்குள் மாயக்கை விறுமர் கோயிலுக்கு முன்னாள் உள்ள பற்றைகள் வெட்டுக் காயங்களுடன் மயக்கமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்டவர் அல்லாவாய் வடக்கு முத்து மாரியம்மன் கோயிலடியைச் சேர்ந்த முத்துலிங்கம் சந்திரகுமார் (வயது 30) எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டிலிருந்து இனந்தெரியாதோரால் அழைத்துச் செல்லப்பட்ட அவர் கடுமையாகத் தக்கப்பட்டும் வெட்டியும் காயப்படுத்தப்பட்ட பின்னர் மாயக்கைப் பகுதியில் உள்ள பற்றைக்குள் போடப்பட்டுள்ளார். நேற்று அப்பகுதியால் சென்றவர்கள் அவரை மீட்டு மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

மேற்படி நபர் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டவர் என்றும், அவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்து இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பிரஸ்தாப நபர் சிகிச்சை பெற்றுவரும் மந்திகை மருத்துவ மனையின் விடுதிக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

(ச-101;35.52)

# தலைமைச் செயலகம் இன்று திறப்பு

(திருகோணமலை)

தமிழத்தேசியக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகம் இன்று திருகோணமலையில் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்படவுள்ளது.

2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான புதிய தலைமைச் செயலகத் திறப்பு அதன் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும கலந்துகொள்ளவுள்ளனர். (ச-4)

# இரத்தவங்கிக்கு 170 ராணுவத்தினர் நேற்று இரத்ததானம் செய்தனர்

இலங்கை இராணுவத்தினரின் 56 ஆவது நிறைவுதினத்தை முன்னிட்டு பலாலி இராணுவத் தலைமையகத்தினால் நேற்று யாழ். நாகவிகாரையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் 170 இராணுவத்தினர் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிக்கு இரத்தம் வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து யாழ். பொதுசன நூலகத்திற்கென ஒருலட்சம் ரூபா காசோலையை யாழ். மாவட்ட இராணுவத்தளபதி சுனில் தென்னக்கோன் யாழ். பொதுசன நூலக நூல்கள் தனபாலசிங்கத்திடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் இராணுவத் தளபதிகள் பலரும் கலந்துகொண்டனர். (ச-19)

# கடற்படையினர் தாக்கியதாக மீனவர்கள் முறைப்பாடு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குக் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் சிலர் கடற்படையினரால் மோசமாகத் தாக்கப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

நேற்று காலை கடற்றொழிலுக்கு சென்று திரும்பும் வழியில் கடற்படையினர் தமக்கு உணவுக்காக மீன்கேட்டதாகவும், அதன் போது மீனவர்கள் மறுப்புத் தெரிவித்ததையடுத்து அவர்கள் தம்மைத் தாக்கியதாகவும் வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மீனவர்களின் இயந்திரம் ஒன்றும் கடற்படையினரால் பறிக்கப்பட்டு கடலில் வீசப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-23)

# நினைவுச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து இடம்பெறும் நினைவுச் சொற்பொழிவுகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் இராமநாதன் நினைவு சொற்பொழிவினை பொருளியற்றுறைத் தலைவர் பேராசிரியர் வி. நித்தியானந்தம் நிகழ்த்தவுள்ளார்.

இச் சொற்பொழிவு நிகழ்வில் ஆர்வலர்கள் எவரும் கலந்துகொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ச)

# அமைதி முயற்சிகளில்....

வுடனான மகிந்தவின் கூட்டணியால் மிகுந்த வருத்தமடைந்தோம். தனிப்பட்ட மகிந்த ராஜபக்ஷவால் இந்த நாட்டிற்கு சிறந்த பங்களிப்புச் செய்யமுடியும். ஆனால் ஜே.வி.பியுடன் இணைந்துள்ள நிலையில், அதையும் மலையகத்திற்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டிற்குமே மகிந்தவால் எந்தப்பங்களிப்பையும் செய்துவிடமுடியாது.

தான் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்போன்ற உறுதியான நடவடிக்கைகளை ரணில் மேற்கொண்டார். அதன் விளைவாகத்தான் இன்று நாம் அனைவரும் அமைதியை அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். அப்படியான உறுதியான நடவடிக்கையை வேறு எந்தவொரு அரசியல் தலைவரும் எடுத்ததில்லை.

அவர் நாட்டின் அரச தலைவராகத் தேர்தெடுக்கப்பட்டால் இன்னும் கூடுதலான பணிகளை அவர் செய்வார். மலையக மக்களுடன் நெருங்கியவர் சந்திகா குமாரதுங்க. எங்களை அமைச்சரவையில் இணைத்துக் கொண்ட அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

அவருடனான அண்மைய சந்திப்பில் மகிந்த - ஜே.பி.பி கூட்டுக் குறித்த கவலையை வெளியிட்டோம். மகிந்தவுடன் இது தொடர்பில் பேசுவதாக அவர் கூறியிருந்தார்.

என்னுடைய தாத்தாவின் மிக நெருங்கிய நண்பர். அதற்காக அவர் ரணிலுடன் கூட்டணி சேர என்னைத் தூண்டிவிடவில்லை. என்னையாரும் தூண்டிவிடமுடியாது என்றார். (ச-4)

## டொன்புறாவ்...

இதேவேளை முஸ்லிம் சமாதான செயலகத்தின் பிரதிநிதிகள் மற்றும் டோக்கியயோ உதவிவழங்கும் இணைத் தலைமை நாடுகளின் இலங்கைப்பிரதிநிதிகள் ஆகியோருடன் அவர் பேச்சுவார்த்தை நடத்த வுள்ளார். (ச-4)

## முன்னாள்...

தலதா மாளிகையின் முன்னாள் தியவதன நிலமே நிறஞ்சன் விஜயரட்ணவும் கண்டியில் வைத்து ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டார். (ச-4)


03.10.2005 முதல்
01.11.2005 வரை
தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
உடனே விஜயம் செய்யுங்கள்
விசேட கழிவு
லைடன் புடவை நிலையம்
இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 222 2381



(C-அ-1690)

மனோகரா யாழ்.
இளைய தளபதி விஜய் . ஜோதிகா .விவேக் நடித்த
திருமலை
கா.நே. 10.30.2.30.6.30.9.30 (பு.நே)
11.10.2005 முதல்
பார்த்திபன் .லட்சுமிராய். வடிவேலு நடித்த
குண்டக்க மண்டக்க...

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
சரத்குமார். வைகைப்புயல் வடிவேலு நமீதா நடித்த
சாணக்கியா
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், ஜோதிகா நடித்த
ராஜா
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.